<u>பொது நியதிகளும் நிபந்தனைகளும்</u>

**உள்ளடக்கப் பட்டியல்**


நியதிகளை முன்வைத்தல்

வரைவிலக்கணங்கள்

1. எல்லாக் கணக்குகளுக்கும் பொதுவானவை
2. பற்றுவரவுப்பதிவேட்டுச் சேமிப்புக் கணக்குகள்/கூற்று/e கூற்றுச் சேமிப்புக் கணக்குகள்
3. நடப்புக்கணக்குகள்
4. காலவைப்புக்கள்
5. சிறுவர் சேமிப்புக்கணக்குகள் (பராயமடையாதோர் சேமிப்புகள்)
6. அழைப்புநிலையச் சேவைகளும் அழைப்புநிலையச் சேவை நட்டோத்தரவாதமும்
7. வரிகள்
8. வரி இணங்கியொழுகுகை
9. ஆளுகின்ற சட்டமும் நியாயாதிக்கமும்
10. ஏனைய பொது வாசகங்கள்
11. வங்கிச் சேவைகளுக்கான செலவு
12. தரவுகளின் வைத்திருக்கையும் தேக்கமும்
13. அறிவுறுத்தல்களின்மீது செயலாற்றுதல்
14. பயன்பாட்டுச் சிட்டைக் கொடுப்பனவுகள்
15. நிதிக் கொடுக்கல்வாங்கல் ஒழுங்குவிதிகள்
16. தகவல்களை வெளிவிடுதல்
17. வாடிக்கையாளர் தகவல்களைச் சேகரித்தலும், செய்முறைப்படுத்துதலும், பகிர்தலும்
18. தரவுகளைப் பாதுகாத்தல்
19. நிதிசார் குற்றச்செயல் ஆபத்து முகாமைச் செயற்பாடு
20. வங்கியின் சோந்தை மற்றும் எதிரீட்டுரிமை
21. கைவிடப்பட்ட ஆதனம்
22. நானாவிதமானவை
23. முடிவுறுத்தலின்மேல் நீடித்திருத்தல்
24. நியதிகளுக்கான திருத்தங்கள்
25. நியதிகளின் மொழிவு
26. தடுக்கொணா வல்இக்கட்டு

பின்வரும் நியதிகளும் நிபந்தனைகளும் கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட்டுடன் பேணப்பட்ட எல்லா இலங்கை ரூபா மற்றும் வெளிநாட்டு நாணயச் சேமிப்புக்கணக்குகளையும்/ நடப்புக்கணக்குகளையும்/காலவைப்புக் கணக்குகளையும் ஆளுதல் வேண்டும்.

கார்கில்ஸ் வங்கி லிமிடெட் ஆனது, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின்கீழ் உரிமமளிக்கப்பட்டவொரு வர்த்தக வங்கியாகவுள்ளது.

(இதனகத்துப்பின்னர் ‘‘கார்கில்ஸ் வங்கி’’, ‘‘வங்கி’’, ‘‘எங்கள்’’, ‘‘நாம்’’, ‘‘எமது’’ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கார்கில்ஸ் வங்கி லிமிடெட் ஆனது, (இச்சொல்லமைப்பு சந்தர்ப்பம் அனுமதிக்குமிடத்து அல்லது தேவைப்படுத்துமிடத்து அதன் அடுத்துறுநர்களையும் சாட்டுதற்காரர்களையும் உள்ளடக்குதல் வேண்டும்) வங்கித்தொழிலை, முதலீட்டை, நிதிசார் மற்றும் வேறு கொடுக்கல்வாங்கல்களையும் மற்றும் பல்வேறு தன்மையினவான கையாளுகைகளையும் நடாத்தும் அத்துடன் கார்கில்ஸ் வங்கியிடமிருந்து சேவைகளையும், விளைபயன்களையும், தகவல்களையும், பண்டங்களையும், நன்மைகளையும், சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் நோக்கங்களுக்காகக் கார்கில்ஸ் வங்கிக்கு அறிவுறுத்தல்களை விடுப்பதற்கும் அதனோடு தொடர்புகொள்வதற்கும் (இதனகத்துப்பின்னர் ‘‘கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள்’’, ‘‘நீங்கள்’’, ‘‘உங்கள்’’, ‘‘உங்களுடைய’’ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கார்கில்ஸ் வங்கியின் கணக்குவைத்திருப்பவரை/வைத்திருப்பவர்களை இயலச்செய்வதற்குக் காலத்துக்குக்காலம் இந்நியதிநிபந்தனைகளுக்கமைய வங்கிச் சேவைகளையும், வசதிகளையும், தகவல்களையும் வழங்குதல் வேண்டும்; (இதன்கண் பயன்படுத்தப்பட்டவாறான இப்பதம் அல்லது சொல்லமைப்பு சந்தர்ப்பம் அவ்வாறு தேவைப்படுத்துமிடத்து அல்லது ஏற்றுக்கொள்ளுமிடத்து கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் மற்றும் அவரது மரபுரிமையாளர்கள்/பெண் மரபுரிமையாளர்கள், நிருவாகிகள், நிறைவேற்றுநர்கள் மற்றும் சட்டமுறையான எவரேனும் பிரதிநிதி என்று பொருளாதல் வேண்டுமென்பதுடன் அவர்களை உள்ளடக்குதலும் வேண்டும்).

(இதனகத்துப்பின்னர் வரைவிலக்கணங்கூறப்பட்ட) இந்நியதிநிபந்தனைகள், கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் பயன்படுத்துகின்ற அல்லது எம்மிடமிருந்து கோருகின்ற, அல்லது நாம் கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு வழங்குகின்ற வங்கித்தொழிற் சேவைகள், வசதிகள் மற்றும் தகவல்கள் தொடர்பாகக் கணக்குவைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் விளக்குகின்றன.

மேற்கூறப்பட்ட ''கார்கில்ஸ் வங்கியும்'' கணக்குவைத்திருப்பவரும்/வைத்திருப்பவர்களும் (இதனகத்துப்பின்னர் வரைவிலக்கணங்கூறப்பட்ட) இவ்வுடன்படிக்கைக்கான திறத்தவர்களென இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் கூட்டாகவும் ''இவ்வுடன்படிக்கைக்கான திறத்தவரெனத்'' தனியாகவும் குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்.

கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் இதன்கண் அடங்கியுள்ள எல்லா நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் முற்றாகவும் சமமாகவும் பிணிக்கப்படுவர். சொல்லப்பட்ட நியதிநிபந்தனைகள், வங்கியின் அலுவலகமுறையான இணையத்தளமான www.cargillsbank.com இன்மீது அல்லது வங்கியின் ஏதேனும் கிளையலுவலகத்திலிருந்து கோரிக்கையின்மேல் பிரதியொன்றாகக் கிடைக்கக்கூடியதாகவிருக்கும். இது, கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கின்றதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படும்.

**நியதிநிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளல்**

நான்/நாம் நியதிநிபந்தனைகளை வாசித்து முழுமையாக விளங்கிக்கொண்டுள்ளேன்/ கொண்டுள்ளோம் என்றும், அவற்றின்கீழான கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும்

உரிமைகளை நான்/நாம் அறிந்துள்ளேன்/அறிந்துள்ளோம் என்றும் இத்தால் ஒப்புக்கொள்கின்றேன்/ஒப்புக்கொள்கின்றோம் என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட நியதிநிபந்தனைகளை ஏற்றுக்கொள்கின்றேன்/ ஏற்றுக்கொள்கின்றோம்.

……………………………...                                        …………………………………

**நியதிகளை முன்வைத்தல்:**

- ஒருமைக்கான குறிப்பீடு பன்மையையும் உள்ளடக்கும் (மற்றும் மறுதலையாக).

- ‘‘நீங்கள்’’, ‘‘உங்கள்’’, ‘‘அவர்’’ என்ற பதங்களை அல்லது ஒத்த மறுபெயர்களைப் பயன்படுத்துதலானது, சந்தர்ப்பம் அவ்வாறு ஏற்றுக்கொள்ளுமிடத்து, ஏற்புடையவாறு கணக்குவைத்திருப்பவர் என்று பொருளாதல் வேண்டும். ஆண்பாலிலான எல்லாக் குறிப்பீடுகளும் பெண்பாலையும் உள்ளடக்கும்.

- இதன்கண் வழங்கப்பட்ட நியதிநிபந்தனைகள், எல்லாப் பொது விண்ணப்பங்களுக்கும் மேலதிகமாக, சேமிப்பு, நடப்பு மற்றும் காலவைப்புக்களை மேவுகின்றன.

- இதன்கண் மேவப்படாத குறித்த விளைபயன்கள் மற்றும் சேவைகள்பற்றிய நியதிநிபந்தனைகள் கோரிக்கையின்மீது கிளைகளிலிருந்து கிடைக்கக்கூடியனவாகும்.

**வரைவிலக்கணங்கள்:**

இந்நியதிநிபந்தனைகளில் பயன்படுத்தப்பட்ட பெரிய எழுத்துக்களிலான பதங்கள், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய, பின்வரும் கருத்துக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:

- **‘‘கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள்’’** (மற்றும் ‘‘நீங்கள்’’, ‘‘உங்கள்’’, ‘‘உங்களுடைய’’) என்பது, கார்கில்ஸ் வங்கியுடன் திறக்கப்பட்டுப் பேணப்பட்ட தொடக்கக் கணக்கின் கணக்குத் திறக்கும் விண்ணப்பத்தில் பெயர்குறிப்பிடப்பட்ட கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் என்று பொருளாதல் வேண்டும்.

- **‘‘உடன்படிக்கை’’** என்பது, இதனகத்துப்பின்னர் குறிப்பிடப்பட்டதும் இவ்வுடன்படிக்கையின் பாகமாக அமையவேண்டியனவாகக் காலத்துக்குக்காலம் வெளியிடப்பட்ட சேவைகளை வழங்குவதற்கான எவையேனும் குறைநிரப்பு நியதிநிபந்தனைகளுட்பட,

இவ்வுடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்கக் காலத்துக்குக்காலம் திரிபுபடுத்தப்பட்டவாறானதுமான நியதிநிபந்தனைகளின் தொகுதி என்று பொருளாதல் வேண்டும்.

- **"ஏரீஎம்"** என்பது, தன்னியக்க ரெலர் பொறிகள் என்று பொருளாதல் வேண்டும். இந்நியதிநிபந்தனைகளில் ஓர் ஏரீஎம்முக்கான குறிப்பீடு, அட்டையைப் பயன்படுத்துவதனூடாகத் தொழிற்படுத்தப்படக்கூடிய ஒரு வலையமைப்பின் பாகமாகவமைகின்ற ஏதேனும் ஒத்த பெறுமதியை உள்ளடக்கும் (அட்டை வழங்கப்பட்ட நாட்டினுள்ளாயினுஞ்சரி அல்லது அதற்குவெளியேயாயினுஞ்சரி).

- **"அதிகாரசபைகள்"** என்பது, கார்கில்ஸ் வங்கியின் ஏதேனும் பாகத்தின்மீது நியாயாதிக்கங்கொண்டுள்ள ஏதேனும் நீதிமுறை, நிருவாக அல்லது ஒழுங்குபடுத்தும் குழு, ஏதேனும் அரசாங்கம், அல்லது பகிரங்க அல்லது அரசாங்க முகவராண்மை, துணைக்குழு அல்லது அதிகாரசபை, ஏதேனும் வரி அதிகாரசபை, பிணையங்கள், அல்லது எதிர்காலப் பரிவர்த்தனை, நீதிமன்றம், மத்திய வங்கி அல்லது சட்ட வலுவுறுத்தற் குழு அல்லது அதன் எவரேனும் முகவர்கள் என்று பொருளாகும்.

- **"வங்கித்தொழில் நாள்"/ "வழமையான வங்கித்தொழில் மணித்தியாலங்கள்" மற்றும் "வேலைநாள்/மணித்தியாலங்கள்"** என்பது, எம்மால் வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டாலொழிய, ஒரு வங்கித்தொழில்/வேலை நாளை மற்றும் வழமையான வங்கித்தொழில்/ வேலை மணித்தியாலங்களைக் குறிப்பீடுசெய்தல் வேண்டும்.

- **"கார்கில்ஸ் வங்கி லிமிடெட்"** என்பது, கொழும்பு 03, காலி வீதி, 696 ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்துடன் இலங்கை மத்திய வங்கியின் நியாயாதிக்கத்தின்கீழ் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டதும் இலங்கையினுள் தொழிற் செயற்பாடுகளைக் கொண்டுநடாத்துகின்றதுமான ஒரு வங்கி என்று பொருளாகும்.

- **“இணங்கியொழுகுகைக் கடப்பாடுகள்”** என்பது, பின்வருவனவற்றுடன் இணங்கியொழுகுவதற்குக் கார்கில்ஸ் வங்கியின் எவரேனும் உறுப்பினரின் கடப்பாடுகள் என்று பொருளாகும்:- (அ) ஏற்புடையதான ஏதேனும் உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நியதிச்சட்டம், சட்டம், ஒழுங்குவிதி, கட்டளைச்சட்டம், விதி, தீர்ப்பு, தீர்வை, தன்னிச்சையான சட்டக்கோவை, பணிப்புரை, தடைவிதிப்புகள் முறை, நீதிமன்றக் கட்டளை, கார்கில்ஸ் வங்கியின் எவரேனும் உறுப்பினருக்கும் ஓர் அதிகாரசபைக்குமிடையேயான உடன்படிக்கை அல்லது அதிகாரசபைகளுக்கிடையேயானதும் கார்கில்ஸ் வங்கிக்கு ஏற்புடையதுமான உடன்படிக்கை அல்லது பொருத்தனை (“சட்டங்கள்”), அல்லது சர்வதேச வழிகாட்டுகையும் உள்ளகக் கொள்கைகளும் அல்லது நடவடிக்கைமுறைகளும், (ஆ) அதிகாரசபைகளிடமிருந்தான ஏதேனும் (செல்லுபடியான) கோரிக்கை அல்லது அறிக்கையிடுதல், ஒழுங்குபடுத்தும் வியாபார அறிக்கையிடுதல், சட்டங்களின்கீழான வெளிவிடுகை அல்லது வேறு கடப்பாடுகள், மற்றும் (இ) எமது வாடிக்கையாளர்களின் ஆளடையாளத்தைச் சரிபார்ப்பதற்குக் கார்கில்ஸ் வங்கியைத் தேவைப்படுத்துகின்ற சட்டங்கள் என்று பொருளாகும்.

- **“அந்தரங்கத் தகவல்கள்”** என்பது, வெளிவிடும் நேரத்தில் அந்தரங்கமானதென வாடிக்கையாளரினால் குறிக்கப்படுகின்றவையும் அல்லது தன்மையில் அந்தரங்கமானவையென, பகிரங்கமற்றவையென அல்லது தனியுரிமைகொண்டவையென நியாயமானவோராள் கருதுகின்றவையுமான எவையேனும் தகவல்கள் என்று பொருளாகும்.

- **“சம்பந்தப்பட்ட ஆள்”** என்பது, (தனிப்பட்ட தரவுகள் அல்லது வரித் தகவல்களுட்பட) எந்த ஆளின் அல்லது உருவகத்தின் தகவல்கள் வாடிக்கையாளரினால் அல்லது அவரது சார்பில் கார்கில்ஸ் வங்கியின் எவரேனும் உறுப்பினருக்கு வழங்கப்படுகின்றனவோ அல்லது சேவைகளை வழங்குதல் சம்பந்தமாகக் கார்கில்ஸ் வங்கியின் எவரேனும் உறுப்பினரினால் வேறுவகையாகப் பெறப்படுகின்றனவோ அந்த ஆளொருவர் அல்லது உருவகமொன்று என்று பொருளாகும். வாடிக்கையாளர் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட ஆளொருவர் என்பது, (வாடிக்கையாளரின்) எவரேனும் உத்தரவாதமளிப்பவரை, ஒரு கம்பெனியின் பணிப்பாளரை

அல்லது அலுவலரை, ஒரு பங்காண்மையின் பங்காளர்களை அல்லது உறுப்பினர்களை, எவரேனும் ''கணிசமானளவிலான சொந்தக்காரரை'', ''கட்டுப்படுத்துகின்ற ஆளை'', அல்லது ஒரு நம்பிக்கைப்பொறுப்பின் நன்மைபெறும் சொந்தக்காரரை, நம்பிக்கைப்பொறுப்பாளரை, தீர்த்துவைப்பவரை அல்லது பாதுகாப்பாளரை, பெயர்குறிக்கப்பட்ட கணக்கொன்றின் கணக்குவைத்திருப்பவரை, பெயர்குறிக்கப்பட்ட கொடுப்பனவொன்றின் பணம்பெறுநரை, வாடிக்கையாளரின் பிரதிநிதியை, முகவரை அல்லது நியமத்தரை, அல்லது கார்கில்ஸ் வங்கியுடனான அவர்களின் வங்கித்தொழில் தொடர்புமுறைக்கு இயைபானதாக வாடிக்கையாளருடன் தொடர்புமுறையொன்றைக் கொண்டுள்ள வேறெவரேனும் ஆட்களை அல்லது உருவகங்களை உள்ளடக்கலாம், ஆனால் அவர்களுக்கல்ல.

- **"கட்டுப்படுத்துகின்ற ஆட்கள்"** என்பது, ஓர் உருவகத்தின்மீது கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற தனியாட்களென்றும் (ஒரு நம்பிக்கைப்பொறுப்புக்காக, இவர்கள், தீர்த்துவைப்பவர், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், பாதுகாப்பாளர், நன்மைபெறுநர்கள் அல்லது வகுப்பினரான நன்மைபெறுநர்கள், மற்றும் நம்பிக்கைப்பொறுப்பின்மீது இறுதியான பயனுறு கடப்பாட்டைப் பிரயோகிக்கின்ற வேறெவரேனும் தனியாளென்றும் (பொதுவாகப்) பொருளாகும் என்பதுடன் ஒரு நம்பிக்கைப்பொறுப்பு அல்லாத சட்ட உருவகமொன்றின் விடயத்தில், அத்தகைய பதம், சமமான அல்லது ஒத்த கட்டுப்பாட்டுப் பதவிகளிலுள்ள ஆட்களென்றும் பொருளாகும்).

- **"வாடிக்கையாளர் தகவல்கள்"** என்பது, ஒன்றில் வாடிக்கையாளரின் அல்லது சம்பந்தப்பட்ட ஓராளின் தனிப்பட்ட தரவுகள், (சேர்த்தனுப்பப்படுகின்ற கூற்றுக்கள், விட்டுக்கொடுப்புக்கள் மற்றும் சம்மதங்களுட்பட) அந்தரங்கத் தகவல்கள் அத்துடன்/அல்லது வரித் தகவல்கள் என்று பொருளாகும்.

- **"நிதிசார் குற்றச்செயல்கள்"** என்பது, பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளிப்பு, இலஞ்சம், ஊழல், வரித் தட்டிக்கழிப்பு, மோசடி, பொருளாதார அல்லது வியாபாரத் தடைவிதிப்புக்களின் தட்டிக்கழிப்பு, அத்துடன்/அல்லது இக்கருமங்கள் தொடர்பான

எவையேனும் சட்டங்களின் அல்லது ஒழுங்குவிதிகளின் மீறுகைகள், அல்லது அவற்றைச் சூழ்ந்துசெயலாற்றுவதற்கான அல்லது மீறுவதற்கான எத்தனிப்புக்கள் என்று பொருளாகும்.

- **"தகவல்கள்"** என்பது, எம்மால் அல்லது தகவல் வழங்குநரொருவரினால் வழங்கப்பட்டவையும் கணக்குவைத்திருப்பவரின்/ வைத்திருப்பவர்களின் பாவனைக்காகக் கிடைக்கக்கூடியனவாக்கப்பட்டவையுமான எவையேனும் நிதிசார், சந்தை அல்லது வேறு தகவல்களும் தரவுகளும் என்று பொருளாதல் வேண்டும்.

- **"தகவல் வழங்குநர்"** என்பது, தகவல்களை வழங்குகின்றவரான கார்கில்ஸ் வங்கி நீங்கலான எவரேனுமாள் என்று பொருளாதல் வேண்டுமென்பதுடன் தகவல் வழங்குநரொருவருக்கு எவையேனும் தகவல்களை வழங்குகின்ற எவரேனுமாளையும் உள்ளடக்கும் ஆனால் அவருக்கல்ல.

- **"நிறுவனம்"** என்பது, இவ்வுடன்படிக்கையின் நோக்கங்களுக்காக நிறுவனமொன்றாகக் கருதப்படவேண்டுமெனக் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் கார்கில்ஸ் வங்கிக்கு அறிவித்துள்ள ஏதேனும் மூன்றாந்திறத்தவர் நிதிநிறுவனம் என்று பொருளாதல் வேண்டும்.

- **"அறிவுறுத்தல்கள்"** என்பது, கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் அனுப்பப்படுகின்றதும் கார்கில்ஸ் வங்கியினால் பெறப்படுகின்றதுமான ஏதேனும் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட எழுத்திலான கோரிக்கை அல்லது வேறேதேனும் அதிகாரமளிக்கப்பட்ட தன்னியக்க அறிவுறுத்தல் என்று பொருளாதல் வேண்டும்.

- **"இழப்பு"** என்பது, எவ்வாறாயினும் கணக்கிடப்பட்ட அல்லது விளைவிக்கப்பட்ட, மற்றும் நேரடியானதாயினுஞ்சரி அல்லது நேரடியற்றதாயினுஞ்சரி, விளைவாந்தன்மையினதாயினுஞ்சரி, தண்டமுறையானதாயினுஞ்சரி அல்லது இடைநேர்விளைவானதாயினுஞ்சரி, ஏதேனும் உரிமைக்கோரிக்கை, விதிப்பனவு, ஆகுசெலவு (ஏதேனும் சட்ட அல்லது வேறு உயர்தொழில்சார் ஆகுசெலவுட்பட ஆனால் அதற்கல்ல), சேதவீடுகள், கடன், செலவு, வரி, பொறுப்பு, கடப்பாடு, குற்றச்சார்த்துகை, துடர்ச்சி,

வழக்கு, கோரிக்கை, வழக்குக்காரணம், வழக்குநடவடிக்கை அல்லது தீர்ப்பு என்று பொருளாகும்.

- **"தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்"** என்பது, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆட்கள் இணைந்தவர்களாகவுள்ள கூட்டுக் கணக்குகளின் விடயத்தில், கணக்கிலுள்ள முறையின்படி தொழிற்படுத்தப்படுமென்பதுடன் கணக்குத் தொடர்பாக வங்கியானது செயலாற்றுவதற்குத் தேவைப்படுத்தவும்படுகின்றது என்று பொருளாகும்.

- **"கடவுச்சொல்"** என்பது, ஒரு பற்றட்டையைப் பயன்படுத்துவதன்மூலமும் கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அட்டைகளுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமலும் தொலைபேசி வங்கித்தொழில், இணைய வங்கித்தொழில், செல்லிடத்தொலைபேசி வங்கித்தொழில் என்பவற்றினூடாக அறிவுறுத்தல்களை அணுகுவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக அல்லது கொடுக்கல்வாங்கல்களைச் செய்வதற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட ஓர் அந்தரங்கச் சொல், சொற்றொடர், அகர எண்ணைக் கொண்டுள்ள இலக்கம் என்று பொருளாதல் வேண்டும்.

- **"தனிப்பட்ட தரவுகள்"** என்பது, வரையறையின்றி, கூருணர்வான தனிப்பட்ட தரவுகள், பெயர் (பெயர்கள்), வதிவிட முகவரி (முகவரிகள்), தொடர்புகொள்ளும் தகவல்கள், வயது, பிறந்த திகதி, பிறந்த இடம், நாட்டினம், பிரசாவுரிமை, தனிப்பட்ட மற்றும் திருமண அந்தஸ்து என்பன உட்பட எந்தத் தரவுகளிலிருந்து ஒரு தனியாளை அடையாளங்காணமுடியுமோ அத்தனியாள் (மற்றும் தரவுகளின் அந்தரங்கத்தன்மைபற்றிய சட்டம் கூட்டிணைப்புகளுக்கு ஏற்புடையதாகின்ற அந்நாடுகளிலுள்ள கூட்டிணைப்பு உருவகங்கள்) தொடர்பான அந்தத் தரவுகள் என்று பொருளாகும்.

- **"சேவைகள்"** என்பது, வரையறையின்றி, (அ) வாடிக்கையாளரின் வங்கிக் கணக்குகளைத் திறத்தல், பேணுதல் மற்றும் மூடிவிடுதல், (ஆ) கடன்வசதிகளையும் வேறு வங்கித்தொழில் விளைபயன்களையும் சேவைகளையும் வாடிக்கையாளருக்கு வழங்குதல் (உதாரணமாக,

பிணையங்களைக் கையாளுதல், முதலீட்டு அறிவுரைஞர், தரகர், முகவராண்மை, காப்பாளர், தீர்வுசெய்தல் அல்லது தொழினுட்பவியல் பெறுகைச் சேவைகள் உட்பட), விண்ணப்பங்களைச் செய்முறைப்படுத்துதல், துணைநிலைக் கடன் மதிப்பீடு மற்றும் விளைபயனுக்கான தகவுடைமை மதிப்பீடு, மற்றும் (இ) சந்தைப்படுத்தல் அல்லது வாடிக்கையாளருக்கு நிதிச்சேவைகளை அல்லது தொடர்புபட்ட விளைபயன்களை மேம்படுத்துதல், சந்தை ஆராய்ச்சி, காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிருவாக நோக்கங்கள் உட்பட, வாடிக்கையாளருடன் கார்கில்ஸ் வங்கியின் ஒட்டுமொத்தத் தொடர்புமுறையைப் பேணுதல் என்று பொருளாகும்.

- **"கூற்று"** என்பது, கொடுக்கப்பட்ட காலப்பகுதியின்போது கணக்கில் நிறைவேற்றப்பட்ட எல்லாக் கொடுக்கல்வாங்கல்களையும் அத்தகைய கணக்கிலுள்ள மீதியையும் எடுத்துக்கூறி ஒரு கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு கார்கில்ஸ் வங்கியினால் அனுப்பப்பட்ட கணக்கின்/கணக்குகளின் ஒரு காலாகாலக் கூற்று என்று பொருளாதல் வேண்டும். உள்ளடக்குவதற்குத் தகுதியானதெனக் கார்கில்ஸ் வங்கி கருதக்கூடிய வேறெவையேனும் தகவல்களையும் அது உள்ளடக்கலாம்.

- **"கணிசமானளவிலான சொந்தக்காரர்கள்"** என்பது, ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஓர் உருவகத்தின் 10 சதவீதத்துக்கு மேற்பட்ட இலாபங்களுக்கு உரித்துடைய அல்லது 10 சதவீதத்துக்கு மேற்பட்ட அக்கறையைக்கொண்ட எவரேனும் தனியாட்கள் என்று பொருளாகும்.

- **"வரி அதிகாரசபைகள்"** என்பது, உள்நாட்டு அல்லது வெளிநாட்டு வரி, இறைவரி, அரசிறை அல்லது பணவகையான அதிகாரசபைகள் என்று பொருளாகும்.

- **"வரித் தகவல்கள்"** என்பது, ஒரு வாடிக்கையாளரின் வரி அந்தஸ்துக்கு நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் தொடர்புபடுகின்ற ஏதேனும் ஆவணப்படுத்துகை அல்லது தகவல்களென்றும் (மற்றும் சேர்த்தனுப்பப்படுகின்ற கூற்றுக்கள், விட்டுக்கொடுப்புக்கள் மற்றும் சம்மதங்களென்றும்) (அவ்வாடிக்கையாளர் ஒரு தனியாளாக அல்லது ஒரு

தொழிலாக, இலாபமீட்டா அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட உருவகமாக இருக்கின்றமையைப் பொருட்படுத்தாது) மற்றும் நியாயமானமுறையில் செயலாற்றுகையில் ஏதேனும் வரி அதிகாரசபைக்கு இணங்கியொழுகுவதற்கு (அல்லது இணங்கியொழுகுகையை எடுத்துக்காட்டுவதற்கு அல்லது இணங்கியொழுகாமையைத் தவிர்ப்பதற்குத்) தேவையாகவுள்ளதெனக் கார்கில்ஸ் வங்கி கருதுகின்ற ஒரு வாடிக்கையாளரின் எவரேனும் சொந்தக்காரர், ''கட்டுப்படுத்துகின்ற ஆள்'', ''கணிசமானளவிலான சொந்தக்காரர்'' அல்லது நன்மைபெறும் சொந்தக்காரரென்றும் பொருளாகும். ''வரித் தகவல்கள்'' என்பது, (ஏற்புடையவாறு) வரிக்கான வதிவிடம் அத்துடன்/அல்லது ஒழுங்கமைப்பின் இடம், வரிக்கான வாழிடம், வரி அடையாளங்காணல் இலக்கம், வரிச் சான்றுப்படுத்துகைப் படிவங்கள் (பெயர் (பெயர்கள்), வதிவிட முகவரி (முகவரிகள்), வயது, பிறந்த திகதி, பிறந்த இடம், நாட்டினம், பிரசாவுரிமை என்பனவுட்பட) குறித்தசில தனிப்பட்ட தரவுகள் என்பவற்றை உள்ளக்கும் ஆனால் அவற்றுக்கல்ல.

- **''வரிச் சான்றுப்படுத்துகைப் படிவங்கள்''** என்பது, கணக்குவைத்திருப்பவரின் அல்லது ஓர் உருவகத்தின் சம்பந்தப்பட்ட ஆளின் வரி அந்தஸ்தை உறுதிப்படுத்துவதற்குக் காலத்துக்குக்காலம் ஒரு வரி அதிகாரசபையினால் அல்லது கார்கில்ஸ் வங்கியினால் வழங்கப்படக்கூடிய அல்லது தேவைப்படுத்தப்படக்கூடிய எவையேனும் படிவங்கள் அல்லது வேறு ஆவணப்படுத்துகை என்று பொருளாகும்.

- **''நியதிகள்''** என்பது, காலத்துக்குக்காலம் திருத்தப்படக்கூடியவாறு கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு நாம் அறிவிக்கவேண்டிய எவையேனும் குறைநிரப்பு நியதிகளுட்பட ஆனால் அவற்றுக்கல்ல, இவ்வுடன்படிக்கையை ஆளுகின்ற இந்நியதிநிபந்தனைகள், எவையேனும் உரிமைதுறப்புக்கள், இணைய அந்தரங்கத்தன்மைக் கூற்று/கூற்றுக்கள், வழிகாட்டுநெறிகள் என்று பொருளாதல் வேண்டும்.

- **''கொடுக்கல்வாங்கல்/வாங்கல்கள்''** என்பது, கணக்குகள் தொடர்பாக அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கார்கில்ஸ் வங்கிக்குக் கணக்குவைத்திருப்பவர்

ஒருவரினால் எழுத்தில் அல்லது KIOSK, பற்று/கடன் அட்டையை அல்லது இணைய/செல்லிடத் தொலைபேசி வங்கித்தொழிலை அல்லது எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் அத்தகைய ஊடகத்தைப் பயன்படுத்துவதன்மூலம் விடுக்கப்பட்ட ஏதேனும் அனுமதிக்கத்தக்க அறிவுறுத்தல் என்று பொருளாதல் வேண்டும் (கொடுக்கல்வாங்கல்களின் உதாரணங்கள், பண மீளப்பெறுகைகள், விற்பனைப் புள்ளிகளிலான கொடுப்பனவுகள், பண/காசோலை வைப்புக்கள், நிதிக் கைமாற்றுகைகள் முதலியனவாகவிருக்கும்).

## 1. எல்லாக் கணக்குகளுக்கும் பொதுவானவை

### 1.1 பதிவுக் கட்டளைக்கற்கள்

1.1.1 வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆளடையாள ஆவணத்தை/ஆவணங்களை [உ.ம். தேசிய அடையாள அட்டை (தேஅஅ), தேஅஅ இலக்கத்தைக்கொண்ட கடவுச்சீட்டு மற்றும் சாரதி உரிமம்] மற்றும் வதிவிட முகவரியைச் சரிபார்ப்பதற்கான எண்பிப்பாவணங்களைக் குறிப்பீடுசெய்வதன்மூலம் தனிப்பட்ட அடையாளங்காணலின்மீது ஆளொருவரினால்/ஆட்களினால் ஒரு ரூபாச் சேமிப்புக்கணக்கு, நடப்புக்கணக்கு மற்றும் காலவைப்பு திறக்கப்படலாம்.

1.1.2 (இதனகத்துப்பின்னர் தனியாகக் ''கணக்கு'' அல்லது கூட்டாகக் ''கணக்குகள்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ரூபாச் சேமிப்புக்கணக்கு (கணக்குகள்), நடப்புக்கணக்கு (கணக்குகள்) மற்றும் காலவைப்பு (வைப்புக்கள்) பின்வருவோரினால் திறக்கப்படலாம்:

1.1.2.1 அவரது அல்லது அவளது சொந்தப் பெயரில் ஒரு தனியாளினால்

1.1.2.2 தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட ஆட்களினால் கூட்டாக அவர்களின் பெயர்களில்.

1.1.3 ஒவ்வொரு கணக்குக்கும் ‘‘கணக்கிலக்கம்’’ எனவறியப்படும் தனித்துவமான இலக்கம் ஒன்று கொடுக்கப்படும்; இது, வங்கியுடனான எல்லாத் தொடர்பாடல்களிலும் எல்லா நிதிசார் (வைப்பு, கைமாற்றுகை, விசாரணை, பணஞ்செலுத்தும் நறுக்குகள் மற்றும் மீளப்பெறுகைப் படிவங்கள்) மற்றும் நிதிசாராக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய ஆவணங்களின்மீதும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1.1.4 வங்கியின் தற்றுணிபில் காலத்துக்குக்காலம் மாற்றத்துக்கமைவாகவுள்ள குறைந்தபட்ச மீதிபற்றி ஒவ்வொரு கணக்கும் அதன் சொந்தத் தேவைப்பாட்டைக் கொண்டிருக்கும். அத்தகைய குறைந்தபட்ச மீதியானது கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் எதிர்கொள்ளப்படாதிருப்பின், வங்கியானது அத்தகைய கணக்குகளின்மீது கொடுக்கல்வாங்கல் விதிப்பனவுகளை அத்துடன்/அல்லது சேவை விதிப்பனவுகளை அறவிடலாம். விதிப்பனவுகளின் நிலவுகின்ற காப்புவரி ஏற்புடையதாதல் வேண்டும்.

1.1.5 கணக்குவைத்திருப்பவராக அமைகின்ற தனியாட்களுள் எவரும் இறக்கும்பட்சத்தில், சொல்லப்பட்ட கூட்டுக் கணக்கின் வரவிலுள்ள பணங்கள், உயிர்வாழுகின்ற கணக்குவைத்திருப்பவருக்கு அல்லது கணக்குவைத்திருப்பவர்களுக்குச் செலுத்தீடு செய்யப்படுமென்பதுடன் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின்படி பணங்களைச் செலுத்துவதற்காகக் கூட்டுக் கணக்குவைத்திருப்பவர் எவரும் வங்கியைப் பொறுப்புடையதாக்கவும்மாட்டார்.

வங்கியானது கூட்டுவைத்திருப்பவர்களுள் ஒருவர் அல்லது எவரும் இறந்தமைபற்றிய அறிவித்தலைப் பெற்றதன்மேல், வங்கியானது எத்தகையதுமான ஏதேனும் கணக்கினதாக அல்லது கணக்குகளினதாக வங்கியின் வரவிற்கிருக்கும் அல்லது அதனால் வைத்திருக்கப்படும் எத்தகையனவுமான எல்லாப் பணங்களையும், பிணைப்பொறுப்புகளையும், உறுதிகளையும், ஆவணங்களையும், வேறு ஆதனங்களையும் கூட்டுவைத்திருப்பவரின் (வைத்திருப்பவர்களின்) உயிர்வாழ்பவருக்கு

அல்லது உயிர்வாழ்பவர்களுக்கு அல்லது அவர்களின் கட்டளைக்குக் கொடுப்பனவுசெய்வதன்மேல் அல்லது ஒப்படைப்பதன்மேல் கூட்டுவைத்திருப்பவருக்கான (வைத்திருப்பவர்களுக்கான) அதன் கடப்பாடுகளிலிருந்து அது முழுமையாகப் பொறுப்புவிடுவிக்கப்படுதல் வேண்டுமெனக் கூட்டுவைத்திருப்பவர்களுள் ஒவ்வொருவரும் உடன்படுகின்றாரெனத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் குறிப்பீடுசெய்தல் வேண்டும். வேறுவகையாகக் கணக்கின்மீது உறப்பட்டவொரு மேலதிகப்பற்று அல்லது வேறு கடப்பாடுகள், ஒவ்வொரு கூட்டுக் கணக்குவைத்திருப்பவரினதும் கூட்டு மற்றும் தனித்தனியான பொறுப்பாதல் வேண்டும். குறிப்பிட்டவொரு கணக்குத் தொடர்பாகக் கூட்டுக் கணக்குவைத்திருப்பவர்களுள் எவரேனுமொருவரினால் அல்லது ஒருவருக்கு மேற்பட்டோரினால் [ஆனால் எல்லோரினாலுமல்ல] இதன்கீழான கணக்குவைத்திருப்பவர்களுள் எவரினதும் அதிகாரத்திலான ஏதேனும் மாற்றத்தின் அல்லது இல்லாதொழிப்பின் விடயத்தில், வங்கியானது அதன் தனித்தற்றுணிபில், எல்லாக் கூட்டுக் கணக்குவைத்திருப்பவர்களினாலும் சொல்லப்பட்ட கணக்கு அதன்பின்னர் கூட்டாகத் தொழிற்படுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தலாம்.

1.1.6 வங்கியானது, அறிவித்தலின்றி, வங்கிக்கான எவையேனும் பொறுப்புக்களுடனான ஏதேனும் கணக்கை/கணக்குகளை இணைக்கலாம் அல்லது ஒன்றுதிரட்டலாமென்பதுடன் அத்தகைய பொறுப்புக்கள் எதிர்பாராதவையாக, ஆரம்பமானவையாக அல்லது இணையுறுவானவையாக மற்றும் தனித்தனியாக அல்லது கூட்டாக இருப்பினுஞ்சரி அத்தகைய எவையேனும் கணக்குகளின் வரவிற்கிருக்கும் ஏதேனும் பணத்தொகையை/தொகைகளை அல்லது வேறேவையேனும் கணக்குகளின்மீது அல்லது வேறெதேனும் அம்சம் தொடர்பில் வங்கியிடமிருந்து உங்களுக்குச் சேர்மதியான வேறேதேனும் பணத்தொகையை/தொகைகளை எதிரீடுசெய்யலாம் அல்லது கைமாற்றலாம்.

1.1.7 வங்கியுடன் வைத்திருக்கப்பட்ட ஏதேனும் கணக்குக்குப் பற்றுவைப்பதற்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு வங்கிக்கு விடுக்கப்பட்ட பணிப்பாணைக்கிணங்க அதிகாரமளிக்கப்பட்ட கணக்குவைத்திருப்பவரிடமிருந்து/வைத்திருப்பவர்களிடமிருந்து பெறப்பட்ட (நிலையான அறிவுறுத்தல்களுட்பட) மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட எழுத்திலான அறிவுறுத்தல்களின்மீது மட்டுமே வங்கி செயலாற்றுதல் வேண்டும்.

1.1.8 வங்கியின் தற்றுணிபில் முனையப்படும் மற்றும் நட்டோத்தரவாதமொன்று பெற்றுக்கொள்ளப்படுவதற்கமைய, வங்கிக்கும் கணக்குவைத்திருப்பவருக்கும்/ வைத்திருப்பவர்களுக்கும் இடையே குறித்தவோர் உடன்படிக்கையின்றி, தொலைநகல் அல்லது இலத்திரனியல் அஞ்சல் அல்லது வேறேதேனும் இலத்திரனியல் ஊடகத்தினூடான அறிவுறுத்தல்களின்மீது வங்கி செயலாற்றுதலாகாது.

## 1.2 வைப்புக்கள்

1.2.1 விரும்பத்தக்கவாறு அடிக்கடியாக வைப்புக்கள் இடப்படலாம். ரெலர் கருமபீடங்களில் இடப்பட்ட எல்லா வைப்புக்களும் வைப்பு நறுக்கைச் செல்லுபடியாக்குதல்மூலம் அல்லது வைப்பு நறுக்கின்மீது வங்கியின் அதிகாரமளிக்கப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினரொருவரின் கையொப்பத்தின்கீழ் எழுத்துமூலம் ஒப்புக்கொள்ளப்படும்.

1.2.2 கணக்குகளுக்கு வைப்பிலிடப்பட்ட காசோலைகள் சேகரிப்புக்காக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பணஞ்செலுத்தும் வங்கியினால் தீர்வுசெய்யப்படும்வரை வரும்படிகள் மீளப்பெறப்படுவதற்குக் கிடைக்கக்கூடியனவாக இருக்கமாட்டாது. இந்நியதிநிபந்தனைகள் எவ்வாறிருப்பினும், முறையான அறிமுகம் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்பட்டாலொழிய, சேமிப்புக்கணக்குகள், காசோலைகளைச் சேகரித்துத் தீர்வுசெய்வதற்காக உட்கருதப்படுவதில்லை; ஆதலால் கொண்டுவருபவருக்கு, வைப்பாளருக்கு அல்லது மூன்றாந்திறத்தவர்களுக்குச் செலுத்தப்படற்பாலதாக

வரையப்பட்ட காசோலைகளை, பங்கிலாப ஆணைப்பத்திரங்களை மற்றும் வேறு சாதனங்களை ஏற்கமறுப்பதற்கான உரிமையை வங்கி ஒதுக்கிவைக்கின்றது.

1.2.3 பணஞ்சாரா வைப்புக்கு உங்களுக்கு முழுச் சட்டவுரித்துள்ளதென நீங்கள் குறிப்பிட்டு நம்புறுதிசெய்கின்றீர்களென்பதுடன் பணஞ்சாரா வைப்பின்மீது காணப்படுகின்ற கையொப்பங்கள், புறக்குறிப்புக்கள் மற்றும் விபரங்களின் மெய்யானதன்மை, செல்லுபடியாந்தன்மை மற்றும் சரியானதன்மைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கின்றீர்கள்.

1.2.4 தீர்வுசெய்யப்படுவதற்காக/சேகரிக்கப்படுவதற்காக வேறு வங்கிகளின்மீது வரையப்பட்ட ரூபாக் காசோலைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்படக்கூடியவாறாக லங்கா கிளியர் பிறைவேட் லிமிடெட்டின் (“LCPL”) விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அமைந்தனவாகவிருக்கும். பணஞ்செலுத்தும் வங்கிகளினால் விதிக்கப்பட்ட ஏதேனும் தரகு அல்லது கட்டணம், வங்கியின் தனித்தற்றுணிபில் ஒரு மிகைக்கட்டணத்துடனோ அதுவின்றியோ முறையான கணக்குக்கு அல்லது வேறேதேனும் கணக்குக்குப் பற்றுவைக்கப்படும்.

1.2.5 வங்கியின்மீது வரையப்பட்ட வரைவுகள்/காசோலைகள் ஒரு கணக்கின் வரவினுட் செலுத்தப்படும்போது, வங்கியானது அதன் வெளியிடப்பட்ட விதிப்பனவுகளின் காப்புவரிக்கிணங்கக் கையாளுதற்கான விதிப்பனவுகளைக் கழித்தல் வேண்டும்.

1.2.6 **வங்கியினாலான எதிர்மாற்றமும் சரியான பதிவுகளும்**

வங்கியானது, ஒரு பிழையினால் அல்லது செயலினால் அல்லது விட்டுவிடுகையினால் கணக்குவைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் கணக்குக்குத் தவறாகப் பற்றுவைக்கும் பட்சத்தில், வங்கி எக்கட்டத்திலும் அத்துடன்/அல்லது எந்நேரத்திலும் சொல்லப்பட்ட பதிவையும் வட்டி (ஏதேனுமிருப்பின்) அதனையும் எதிர்மாறாக்கவும்

அத்துடன்/அல்லது கணக்குவைத்திருப்பவரிடமிருந்து/வைத்திருப்பவர்களிடமிருந்து சொல்லப்பட்ட தொகையை உரிமைகோரவும் உரித்துடையதாதல் வேண்டும்.

### 1.2.7 வெளிநாட்டு நாணய வைப்பும் வெளிநாட்டு நாணய அனுப்புதொகையும்

#### 1.2.7.1 வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

வாடிக்கையாளரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வெளிநாட்டு நாணயத்தில் வாடிக்கையாளரினால் கொடுப்பனவுகளினதும் கையுதிர்ப்புக்களினதும் இலத்திரனியல் கொடுத்துத்தீர்த்தல்களைப் புரிவதற்குச் சேவையாற்றுகின்றன.

#### 1.2.7.2 அனுப்புதொகை

அ) வெளித்திரும்பல் அனுப்புதொகைகளை முழுமையாக விண்ணப்பகாரரின் ஆபத்தில் அனுப்புவதற்கு வங்கி சுதந்திரமுடையது. செய்தியைக் கடத்துவதில் ஏற்படக்கூடிய இலாபங்களின் அல்லது ஒப்பந்தங்களின் ஏதேனும் இழப்புக்காக அல்லது ஆகுசெலவுக்காக அல்லது செலவுக்காக அல்லது விசேட, நேரடியற்ற அல்லது விளைவாந்தன்மையினதான இழப்புக்காக அல்லது சேதவீடுகளுக்காக, தாமதத்துக்காக, பிழைக்காக, விட்டுவிடுகைக்காக, அல்லது பெறப்படும்போது அதன் பிறழ்பொருள்கோடலுக்காக அல்லது கொடுப்பனவு செய்யப்படவேண்டிய நாட்டின் தீர்வுசெய்யும் முறைமையினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் தாமத்துக்காக அல்லது அனுப்புதொகையைச் சேகரிப்பதில் நன்மைபெறும் வங்கியின் ஏதேனும் தவறுகையான அல்லது அசட்டையான செயலுக்காக அல்லது வங்கியின் அல்லது அதன் முகவரின் (முகவர்களின்) கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் நிகழ்வுக்காக அல்லது எவரேனும் தொடர்பாளர்கள், முகவர்கள்

அல்லது உபமுகவர்களின் ஏதேனும் செயலுக்காக, விட்டுவிடுகைக்காக, அசட்டைக்காக, தவறுகைக்காக, தவறுதலுக்காக அல்லது கடனிறுக்கவகையறவுக்காக வங்கி பொறுப்பாதலாகாது. நன்மைபெறுநரின் உண்மையானதன்மையை அல்லது மெய்யானதன்மையை நிச்சயிப்பதற்கு வங்கி பொறுப்பாகமாட்டாது; பதிலாக இது விண்ணப்பகாரரின் தனிப்பொறுப்பாகும்.

வங்கியினால் வெளித்திரும்பல் அனுப்புதொகையின் செயல்நிறைவேற்றமானது, இலங்கை மத்திய வங்கியினதும், இப்போது அல்லது இதனகத்துப்பின்னர் அதனோடு சம்பந்தப்படுகின்ற வேறு தகுதிவாய்ந்த அதிகாரசபைகளினதும் எல்லா ஒழுங்குவிதிகளுக்கும், தீர்வைகளுக்கும், நிருவாக விதிகளுக்கும், கட்டளைகளுக்கும், சுற்றறிக்கைகளுக்கும் அமைந்ததாகவுள்ளது.

வங்கியானது வெளித்திரும்பல் அனுப்புதொகைக்கான அதன் வழக்கமுறையான நடவடிக்கைகளை எடுக்கலாமென்பதுடன் அவ்வாறு செய்வதில் வங்கியானது விண்ணப்பகாரரின் சார்பில் ஏதேனும் தொடர்பாடல் முறையை, தொடர்பாளரை, உபமுகவரை அல்லது வேறு முகவராண்மையைப் பயன்படுத்துவதற்குச் சுதந்திரமுடையதாதலும் வேண்டும்.

ஆ) வங்கியானது, வங்கியின் விற்பனை வீதத்தில், அனுப்பப்பட்ட வெளித்திரும்பல் நிதிகளை, வங்கியினால் அத்தகைய நிதிகள், உண்மையாக அனுப்பப்பட்ட நாளன்று கணக்கின் நாணயத்திலிருந்து வழமையாக மாற்றும். எவ்வாறாயினும், மாற்ற அத்துடன் கைமாற்றத் திகதிகள் முழுமையாக வங்கியின் தற்றுணிபிலுள்ளன.

இ) ஓர் அனுப்புதொகையை இரத்துச்செய்யும் விடயத்தில், தொடர்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையின்மீதும் மீளளிப்புச் செய்யப்பட்ட நாளன்றுள்ள வங்கியின் வாங்கும் வீதத்திலும் மட்டுமே மீளளிப்புச் செய்யப்படவேண்டும். வங்கியானது, அதன்மீதும் அதன் தொடர்பாளர்களின்மீதும் அல்லது முகவரின்மீதும் அவ்வாறு உறப்பட்ட செலவுகள் திருப்பிக்கொடுக்கப்படுவதற்கு உரித்துடையது. சேகரிக்கப்பட்ட எல்லா இரத்துச்செய்தல் விதிப்பனவுகளும், அறவீடுகளும், தரகுகளும் மீளளிக்கற்பாலனவல்ல.

ஈ) கொடுப்பனவிலான அல்லது கொடுப்பனவுபற்றிய அறிவித்தலைக் கொடுப்பதிலான தாமதம் காரணமான ஏதேனும் இழப்புக்காக அல்லது சேதத்துக்காக, இடைப்பெயர்வில் அல்லது வேறுவகையாகப் பொருட்களின் இழப்புக்காக, எவையேனும் பொருட்களை, கடிதத்தை, தந்தியைக் கடத்தலிலான அல்லது ஒப்படைத்தலிலான சிதைவு, பிழை, விட்டுவிடுகை, இடையீடு அல்லது தாமதத்துக்காக அல்லது வங்கியினது தொடர்பாளர்களின் அல்லது முகவர்களின் நடவடிக்கைகளுக்காக வங்கி பொறுப்பாதலாகாது.

உ) வங்கியானது, பெறப்பட்ட உட்திரும்பல் அனுப்புதொகையை, வங்கியினால் அத்தகைய நிதிகள் வரவுவைக்கப்படுகின்ற நாளன்று வங்கியின் வாங்கும் வீதத்தில் கணக்கின் நாணயத்தில் வழமையாக மாற்றும்.

1.2.7.3 வாடிக்கையாளரின் ஆபத்து

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல்கள் வங்கியை அவற்றுக்குப் பொறுப்பாக்கமுடியாத வெளிநாட்டுச் செலாவணி ஆபத்துக்களை உட்படுத்தலாமென முழுமையாக அறிந்துகொண்டு வாடிக்கையாளர்

ஒவ்வொரு வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கலையும் செய்துகொள்ளுதல் வேண்டும்.

1.2.8 சேகரிப்புக்காக வாடிக்கையாளரொருவரினால் முன்வைக்கப்பட்ட ஏதேனும் காசோலை, உண்டியல், தாள், வரைவு, பங்கிலாபம், ஆணைப்பத்திரம் அல்லது வேறு சாதனத்தின்மீதான எவையேனும் புறக்குறிப்புகளுக்கு, பொறுப்புவிடுவிப்புக்கு அல்லது பொறுப்புவிடுவிப்புகளுக்கு அது உத்தரவாதமளிக்கின்றமை காரணமாக வங்கி உறக்கூடிய அல்லது அடையக்கூடிய ஏதேனும் இழப்புக்காக, வாடிக்கையாளர், சேகரிக்கின்ற வங்கியாளரென்றமுறையில் வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தல் வேண்டும்; அத்துடன் வங்கியினால் கொடுக்கப்பட்ட அத்தகைய ஒவ்வோர் உத்தரவாதமும் ஒவ்வொரு விடயத்திலும் வாடிக்கையாளரின் கோரிக்கையின்மீது கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## 1.3 காலாகாலக் கூற்றுக்கள்

1.3.1 கணக்குகளிலுள்ள எல்லாக் கொடுக்கல்வாங்கல்களினதும் பதிவேடு கார்கில்ஸ் வங்கியினால் அனுப்பப்பட்ட கூற்றின்மீது கிடைக்கக்கூடியதாதல் வேண்டும் (பத்திர மற்றும் மின்னஞ்சல் கூற்றுக்களைக் குறிப்பீடுசெய்தல் வேண்டும்). அத்தகைய கூற்றுக்கள், வங்கிக்குக் கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் அறிவுறுத்தப்பட்டவாறு காலாகால அடிப்படையில் இந்நியதிநிபந்தனைகளுக்கிணங்க வங்கியின் பதிவேட்டிலுள்ள அஞ்சல் முகவரிக்கு/மின்னஞ்சல் முகவரிக்குக் கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு வங்கியினால் அஞ்சலிலிடப்படுதல்/ மின்னஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

1.3.2 ஒவ்வொரு கூற்றும் பெறப்பட்டதன்மேல் உடனடியாகவும் எப்பட்சத்திலும் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் அக்கூற்றைப் பெற்றுள்ளனரெனக் கருதப்படும் திகதியிலிருந்து 20 (இருபது) பஞ்சாங்க நாட்களுக்குக் குறையாமலும், கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள், ஒரு கூற்றில் காணப்படுகின்ற ஒவ்வொரு

பதிவையும் பரிசோதனை செய்து சரிபார்க்கவும், அதனைக் கணக்குவைத்திருப்பவரின் சொந்தப் பதிவேடுகளுடன் கணக்கிணக்கஞ்செய்யவும் எவையேனும் மோசடியான அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல்வாங்கல்கள் அல்லது அக்கூற்றுக்குக் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் கொண்டுள்ள வேறெவையேனும் ஆட்சேபனைகள் (கூட்டாகக் "கணக்கிலான ஒழுங்கீனங்கள்") என்பனவுட்பட எவையேனும் பிழைகளை, விட்டுவிடுகைகளை, ஒழுங்கீனங்களை எழுத்தில் வங்கிக்கு அறிவிக்கவும் உடன்படுகின்றார்/உடன்படுகின்றனர். கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள், கொடுக்கப்பட்ட பரிசீலனைக் காலப்பகுதியினுள் வங்கிக்கு அறிவிக்கத்தவறின், கூற்றில் காட்டப்பட்ட மீதியும் கணக்கிலான ஒழுங்கீனங்களுட்பட்ட எல்லாப் பதிவுகளும் சரியானவையாகவும், பூரணமானவையாகவும், அதிகாரமளிக்கப்பட்டவையாகவும் கணக்குவைத்திருப்பவரை/வைத்திருப்பவர்களைப் பிணிக்கின்றவையாகவும் கருதப்படுமென்பதுடன் இப்பிரிவிற்கிணங்கக் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் அவைபற்றி அறிவித்தல்கொடுத்த கொடுக்கல்வாங்கல்கள்தவிர, மிக்க அண்மைய கூற்றின் திகதிவரை இடம்பெறுகின்ற ஏதேனும் கொடுக்கல்வாங்கலுக்காக வங்கி எல்லாப் பொறுப்பிலிருந்தும் விடுவிக்கப்படுதலும் வேண்டும்.

1.3.2.1 வேறெங்கேனும் தரப்பட்டுள்ள விளைவுகளுடன்சேர்த்து, கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் மேலே பிரிவு 1.3.2 இன்கீழான அதன் கடப்பாடுகளுக்கு அமைந்தொழுகுவதற்குத் தவறின் மற்றும் கணக்குவைத்திருப்பவரின் நடத்தை அல்லது விட்டுவிடுகை அதன் கணக்கின்மீதான இழப்பை விளைவித்தால் அல்லது அதற்குப் பங்களித்தால் (வங்கியினால் அடையப்பட்ட அத்துடன்/அல்லது உறப்பட்ட அல்லது வங்கிக்கெதிராகக் கொரணப்பட்ட எத்தகைய எவ்வகையினவையுமான இழப்புக்கள், வரிகள், அறவீடுகள், குற்றப்பணங்கள், கட்டணங்கள், அல்லது தண்டங்கள்) அப்போது,

கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள், அத்தகைய இழப்புத் தொடர்பில் கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு வங்கி ஏதேனும் பொறுப்புடைமையைக் கொண்டிருத்தலாகாதென உடன்படுகின்றார் (உடன்படுகின்றனர்). இவ்வுடன்படிக்கையைப் பின்பற்றித் தேவைப்படுத்தப்பட்டவாறு நேரகாலத்துடனான முறையில் கூற்றுக்களைப் பரிசீலனைசெய்யத் தவறுதல், இவ்வுடன்படிக்கைக்கிணங்கக் கூற்று அல்லது கொடுக்கல்வாங்கற் பதிவேடு பரிசீலனைசெய்யப்பட்டிருப்பின் ஏதேனும் பிழை அல்லது விட்டுவிடுகை கண்டுபிடிக்கப்பட்டிருக்கக்கூடிய நேரத்தை அடுத்துப்பின்னர் ஏற்படுகின்ற ஏதேனும் இழப்பின் அளவுக்குக் கணக்கின்மீதான இழப்பை விளைவித்ததாக அல்லது அதற்குப் பங்களித்ததாகக் கருதப்படுதல் வேண்டுமெனக் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் ஒப்புக்கொள்கின்றார்/ஒப்புக்கொள்கின்றனர். கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு வங்கியின் அதிகபட்சப் பொறுப்பு, வங்கியின் பாரிய அசட்டை அல்லது வேண்டுமென்ற துர்நடத்தை காரணமாகக் கணக்குவைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் கணக்கிலிருந்து தவறாக அல்லது பிழையாக மீளப்பெறப்பட்ட பிரதான தொகையில் உள்ளபடியான நேரடி இழப்பாகவிருக்குமெனக் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் ஒப்புக்கொள்கின்றார்/ ஒப்புக்கொள்கின்றனர்.

1.3.2.2 இதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் காலாகால மீதிக்கூற்று மற்றும் வேறேதேனும் கூற்று அல்லது அறிவுரை அல்லது தகவல்கள் பெறப்படாவிடின் வாடிக்கையாளர் உடனடியாக எழுத்தில் வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

1.3.3 கார்கில்ஸ் வங்கியானது, இன்னலுற்ற கணக்குவைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட அல்லது கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் வேறுவகையாகத் தீர்மானிக்கப்பட்டவொரு கொடுக்கல்வாங்கலுடனான உடன்பாடின்மையை, உடன்பாடின்மைபற்றிய அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து இரண்டு மாதங்களினுள் தீர்த்துவைப்பதற்கு நல்லெண்ணத்துடனான மற்றும் நியாயமான முயற்சிகளை எடுத்தல் வேண்டும். அத்தகைய முயற்சியின்பின்னர் கொடுக்கல்வாங்கல் செல்லுபடியானதொன்றெனக் கார்கில்ஸ் வங்கி தீர்மானித்தால், அது கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்குகளை மூடிவிடுதல்

வங்கியானது ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் கணக்கொன்றைத் திறக்காது தவிர்ப்பதற்கான உரிமையை ஒதுக்கிவைக்கின்றது.

இதேபோன்று, கணக்குவைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் கடைசியாகப் பதியப்பட்ட முகவரிக்குப் போதிய எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தபின்னர், ஏதேனும் காரணத்தைக் குறித்தளிக்காமல் கணக்கொன்றை மூடிவிடுவதற்கான உரிமையையும் வங்கி ஒதுக்கிவைக்கின்றது.

கணக்கிலுள்ள மீதி, தொடர்ச்சியான ஆறுமாதகாலப்பகுதிக்குப் பூச்சியமாக அல்லது அதற்குக் குறைவாக (அல்லது காலத்துக்குக்காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு வேறேதேனும் குறைந்தபட்ச மீதியாக) உள்ளவிடத்து, வங்கியானது, கணக்குவைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் கடைசியாகப் பதியப்பட்ட முகவரிக்கு அத்தகைய மூடிவிடுதல் பற்றி 7 வேலைநாட்களைக்கொண்ட எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தபின்னர் கணக்குகளை மூடிவிடுவதற்கான உரிமையையும் ஒதுக்கிவைக்கின்றது.

கணக்கிலான துர்நடத்தை ஏற்படும் பட்சத்தில் (ஒரு நடப்புக்கணக்கின் விடயத்தில் நிதிகள் இல்லாமையினால் 3 றுக்கு மேற்பட்ட காசோலைகள் திருப்பியனுப்பப்படுதல்) அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளும் காலத்துக்குக்காலம் வலுவிலுள்ள ஒழுங்குவிதிகளும் மீறப்பட்டுள்ளனவென வங்கி திருப்திப்படுமிடத்து, வங்கி அதன் சொந்த விருப்பத்தின்பேரில் கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு அறிவித்தலின்றிக் கணக்கை மூடிவிடலாம்.

## 2. பற்றுவரவுப்பதிவேட்டுச் சேமிப்புக் கணக்குகள்/கூற்று/E-கூற்றுச் சேமிப்புக்கணக்குகள்

### 2.1 பதிவுக் கட்டளைக்கற்கள்

#### 2.1.1 தொடக்க வைப்பு

ஒரு பற்றுவரவுப்பதிவேட்டுக்கான/கூற்றுக்களுக்கான/e-கூற்றுச் சேமிப்புக்கணக்குக்கான குறைந்தபட்ச வைப்பு 1,000.00 ரூபாவாகும் (ஆயிரம் ரூபா மட்டும்). வங்கி முன்னறிவித்தலின்றித் தொடக்க வைப்பை மாற்றலாம் என்பதுடன் காலத்துக்குக்காலம் வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வெவ்வேறு சேமிப்பு விளைபயன்களின் அடிப்படையில் இதனை வேறுபடுத்தலாம். வங்கி அதன் தனித்தற்றுணிபில் குறைவான தொடக்க வைப்புடன் கணக்குகளைத் திறக்கலாம்.

#### 2.1.2 வட்டி

வட்டியானது நாளாந்தம் கிடைக்கக்கூடிய மீதிகளின்மீது கணக்கிடப்படுதல் வேண்டுமென்பதுடன் குறிப்பிட்ட கணக்குக்கு மாதமுடிவில் நிலவுகின்ற வீதத்தில் மாதாந்தம் வரவுவைக்கப்படுதலும் வேண்டும்.

கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள், உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்குத் திறக்கும் படிவத்தில் தமது வரி அந்தஸ்து மற்றும் வதிவிட அந்தஸ்துபற்றிய நியதிச்சட்ட வெளிப்படுத்துகையை நிரப்புதல் வேண்டும். வட்டிக்கொடுப்பனவுகள்மீதான பிடித்துவைத்தல் வரி, கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட வெளிப்படுத்துகைக்கிணங்கக் காலப்பகுதிக்குச் செலுத்தற்பாலதான வட்டியிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும்.

## 2.2 பற்றுவரவுப் பதிவேட்டுச் சேமிப்புக்கணக்குகள்

2.2.1 வங்கியினால் கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்பட்ட பற்றுவரவுப்பதிவேடு, கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் கவனமாகப் பேணிக்காக்கப்படுதல் வேண்டும்.

2.2.2 கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள், பற்றுவரவுப்பதிவேடு தொலைந்துபோகும் அல்லது அழிந்துபோகும் பட்சத்தில் உடனடியாக வங்கிக்கு அறிவித்தல் வேண்டும். கணக்குவைத்திருப்பவரினால்/ வைத்திருப்பவர்களினால் பற்றுவரவுப்பதிவேடு தொலைக்கப்பட்டமை அல்லது அழிக்கப்பட்டமை எதற்கும் வங்கி பொறுப்பெதனையும் ஏற்பதில்லை. கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் வங்கிசார்பில் நட்டோத்தரவாதக் கடிதமொன்று பெறப்பட்டதன்மீது மட்டுமே வங்கியினால் மாற்றீட்டுப் பற்றுவரவுப்பதிவேடொன்று வழங்கப்படும்.

முறையாக நிரப்பப்பட்ட மீளப்பெறுகை நறுக்குடன் தனிப்பட்ட அடையாளங்காணலின்மேல் பணமீளப்பெறுகைகள் அனுமதிக்கப்படும். ஏற்புடையதானவிடத்து, இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட முத்திரைத்தீர்வை

அல்லது வேறேதேனும் நியதிச்சட்ட விதிப்பனவு/வரி/அறவீடு கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் செலுத்தற்பாலதாகும்.

2.2.3 தேவைப்பட்டபோது வங்கிக்கு முன்வைக்கப்படவேண்டிய பற்றுவரவுப்பதிவேட்டில் கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் பதிவுகளெவையும் செய்யப்படுதலாகாது. இது கைமாற்றத்தக்கதல்ல அல்லது குறித்தளிக்கப்படத்தக்கதல்ல என்பதுடன் பிணைப்பொறுப்பாக இதனை அடைமானம்வைக்கவும் முடியாது. பதிவின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலின்பின்னரும் இது பரிசோதனைசெய்யப்படுதல் வேண்டும். ஏதேனும் பிழை உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்படவேண்டும்.

2.2.4 பற்றுவரவுப்பதிவேட்டில் பதிவுசெய்யாமல் வைப்புக்கள் இடப்பட்டிருக்கலாம் அல்லது விடயங்கள் விதிப்பனவுசெய்யப்பட்டிருக்கலாம்/பற்றுவைக்கப்பட்டிருக்கலாம் ஆதலால், பற்றுவரவுப்பதிவேடு, கணக்கின் நடப்பு மீதியை (தற்போதையது) அவசியமாகச் சுட்டிக்காட்டுவதில்லை.

2.2.5 பற்றுவரவுப்பதிவேடு கிரமமாக நாளதுவரையாக்கப்படவேண்டும்.

2.2.6 அறிவுரைகளின் பிரதிகள் வங்கியிடமிருந்து அடுத்துப்பின்னர் கோரப்படின், இச்சேவையை வழங்குவதற்காக விதிப்பனவுகளை அறிவிடுவதற்கான உரிமையை வங்கி ஒதுக்கிவைக்கின்றது.

## 2.3 கூற்று/E கூற்றுச் சேமிப்புக்கணக்குகள்

2.3.1 கணக்குகளிலுள்ள எல்லாக் கொடுக்கல்வாங்கல்களினதும் பதிவேடு கார்கில்ஸ் வங்கியினால் அனுப்பப்பட்ட கூற்றில் கிடைக்கக்கூடியதாதல் வேண்டும். அத்தகைய கூற்றுக்கள், வங்கிக்குக் கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் அறிவுறுத்தப்பட்டவாறு காலாகால அடிப்படையில் இந்நியதிநிபந்தனைகளுக்கிணங்க

வங்கியின் பதிவேட்டிலுள்ள அஞ்சல் முகவரிக்கு/மின்னஞ்சல் முகவரிக்குக் கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு வங்கியினால் அஞ்சலிலிடப்படுதல்/ மின்னஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

2.3.2 கூற்றுச் சேமிப்புக்கள்மீதான மீளப்பெறுகைகள்

தனிப்பட்ட அடையாளங்காணலின்மேல் பண மீளப்பெறுகைகள் அனுமதிக்கப்படும். ஏற்புடையதானவிடத்து, இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட முத்திரைத்தீர்வை அல்லது வேறெவையேனும் நியதிச்சட்ட விதிப்பனவுகள்/வரிகள்/அறவீடுகள் கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் செலுத்தற்பாலனவாகும்.

2.4 ஒரு வாடிக்கையாளரின் கோரிக்கையின்பேரில் பணஞ்செலுத்துவதற்கான கட்டளையொன்று வழங்கப்பட்டதும், வங்கியானது வாடிக்கையாளரிடமிருந்து/ வாடிக்கையாளர்களிடமிருந்து மூலப் பணஞ்செலுத்துவதற்கான கட்டளையும் நட்டோத்தரவாதக் கடிதமுமின்றி ஏதேனும் இரத்துச்செய்தற் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளமாட்டாது.

## 3. நடப்புக்கணக்குகள்

### 3.1 பதிவுக் கட்டளைக்கற்கள்

3.1.1 வங்கி ஏற்கத்தக்க வேறொரு நடப்புக்கணக்குவைத்திருப்பவரிடமிருந்து அறிமுகமொன்றைக் காண்பிப்பதன்மூலம் அல்லது வேறொரு வர்த்தக வங்கியில் வருங்கால வாடிக்கையாளரினால் கணக்குவைத்திருப்பவரினால்/ வைத்திருப்பவர்களினால் நடப்புக்கணக்கொன்று பேணப்பட்டுள்ள அத்தகைய வர்த்தக வங்கியிலிருந்தான குறிப்பீட்டுக் கடிதமொன்றின்மூலம் ஆளொருவரினால்/ஆட்களினால் ரூபா நடப்புக்கணக்கொன்று திறக்கப்படலாம்.

3.1.2 குறைந்தபட்ச வைப்பாக 20,000/- ரூபாவுடன் தனிப்பட்ட நடப்புக்கணக்கொன்று திறக்கப்படலாம். வங்கியானது ஏதேனும் முன்னறிவித்தலின்றி ரூபா நடப்புக்கணக்கொன்றுக்குத் தேவைப்பட்ட தொடக்க வைப்பை மாற்றலாம். வங்கி அதன் தனித்தற்றுணிபில் குறைவான தொடக்க வைப்புக்களுடன் கணக்குகளைத் திறக்கலாம். எவ்வாறாயினும், காலத்துக்குக்காலம் குறைந்தபட்ச மீதியைப் பரிசீலனை செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. அத்தகைய குறைந்தபட்ச மீதி கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் எதிர்கொள்ளப்படாவிடின், வங்கியானது கணக்கின்மீது விதிப்பனவுகளின் காப்புவரியின்படி சேவை விதிப்பனவொன்றை அறவிடுதல் வேண்டும் ஆனால் வங்கியின் தனித்தற்றுணிபின்படி இது காலத்துக்குக்காலம் மீளாய்வுசெய்யப்படலாம்.

3.1.3 ரூபா நடப்புக்கணக்குகளிலுள்ள கடன்மீதிகளின்மீது வட்டியெதுவும் வங்கியினால் செலுத்தப்படுதலாகாது.

3.1.4 வங்கி அதன் தற்றுணிபில் (அவ்வாறு செய்வதற்குக் கடப்பாடின்றி) வாடிக்கையாளரின் ஏதேனும் கொடுப்பனவை எதிர்கொள்ளும் அல்லது ஏதேனும் அறிவித்தலை நிறைவேற்றும் நோக்கங்களுக்காக வாடிக்கையாளருக்குக் கடன் வழங்கலாம், நிதிவசதி அளிக்கலாம் அல்லது பணங்களை முற்பணமாகக் கொடுக்கலாம்; இப்பட்சத்தில் அதனைப் பின்பற்றி எழுகின்ற வாடிக்கையாளரின் எவையேனும் மற்றும் எல்லாப் பொறுப்புக்களும் வங்கியின் கோரிக்கையின்மீது (எழுத்தில் வங்கியினால் வேறுவகையாக உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய) வாடிக்கையாளரினால் மீளச்செலுத்தற்பாலதாதல் வேண்டுமென்பதுடன் பரஸ்பரமாக உடன்பட்டுக்கொள்ளப்பட்ட அத்தகைய வீதத்தில் (அல்லது அத்தகைய உடன்படிக்கை இல்லாதிருப்பின் உள்ளக நடவடிக்கைமுறைகளுக்கிணங்க வங்கி நியாயமானமுறையில் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வீதத்தில்) வட்டிகொண்டதாதலும் வேண்டும்.

## 3.2 காசோலைப் புத்தகங்கள்

3.2.1 கோரிக்கையின்மீது ரூபா நடப்புக் கணக்குவைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்கு, காந்தரீதியிலான மை எழுத்துக் கண்டறிதலுடன் அச்சிடப்பட்டவொரு காசோலைப் புத்தகம்/புத்தகங்கள் வழங்கப்படுதல் வேண்டும். நிலவுகின்ற அரசாங்க முத்திரைத்தீர்வை ஏதேனுமிருப்பின் அதனை உள்ளடக்குவதற்கும் அச்சிடுதற் செலவை மேவுவதற்கும் இப்புத்தகங்களின் வழங்குகைக்காக விதிப்பனவுகள் அறவிடப்படும்.

3.2.2 வங்கியானது, காசோலைப் புத்தகத்துக்கான விண்ணப்பக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் பெற்றதன்மேல், கணக்குவைத்திருப்பவரினால்/ வைத்திருப்பவர்களினால் அல்லது பேராளரான ஆளினால் (அவர் முன்னரே பெயர்குறித்துநியமிக்கப்படவேண்டும்) பெற்றுக்கொள்ளப்படுவதனூடாக அல்லது வங்கியில் பதியப்பட்ட அஞ்சல் முகவரிக்கு அஞ்சலிலிடப்படுவதன்மூலம் தேவைப்பட்ட காசோலைப் புத்தகத்தைக் கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு ஒப்படைத்தல் வேண்டும். ஏதேனும் அனுப்பிவைத்தல் முறைமூலம் உறப்பட்ட ஏதேனும் தாமதத்துக்காக அல்லது இழப்புக்காக வங்கி பொறுப்பெதனையும் ஏற்பதில்லை.

3.2.3 புதிய காசோலைப் புத்தகம் பெறப்படுவதன்மேல், கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள், பாவனைக்குமுன்னர், அதன்மீது அச்சிடப்பட்ட காசோலைத் தொடரிலக்கங்களையும் கணக்கிலக்கத்தையும், கணக்குவைத்திருப்பவரின்/வைத்திருப்பவர்களின் பெயரையும், காசோலைகளின் எண்ணிக்கையையும் சரிபார்த்தல் வேண்டும். எவையேனும் ஒழுங்கீனங்கள் உடனடியாக வங்கிக்கு அறிக்கையிடப்பட வேண்டும்.

3.2.4 எவையேனும் காசோலைகளை வரையுமுன்னர், கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் காசோலைப் புத்தகங்களின்

முதற்பக்கத்தின் உட்புறத்தின்மீது அச்சிடப்பட்ட வழங்குகை நிபந்தனைகளை வாசித்தல் வேண்டும். கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள், அத்தகைய நிபந்தனைகளினால் அல்லது காலத்துக்குக்காலம் வழங்கப்படும் நிபந்தனைகளுக்கான திருத்தங்களினால் பிணிக்கப்படுகின்றனர்.

3.2.5 வங்கிக்கு விடுக்கப்பட்ட பணிப்பாணைக்கும் மாதிரிக் கையொப்பத்துக்கும் (கையொப்பங்களுக்கும்) இணங்க, கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் காசோலைகளைக் கையொப்பமிடுதல் வேண்டும். கையொப்பத்திலான அல்லது கையொப்பமிடுநர்களிலான எவையேனும் மாற்றங்கள் எழுத்தில் உடனடியாக வங்கிக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

3.2.6 மோசடியான மாற்றங்களை வசதிப்படுத்தாதவொரு முறையில் அல்லது வங்கி பிறழ்வழியில் இட்டுச்செல்லப்படாத அல்லது பிறழ்வழியில் நெறிப்படுத்தப்படாதவொரு முறையில் காசோலைகள் வரையப்படுதல் வேண்டும்.

3.2.7 காசோலைகள் நிரந்தரமான மையிலும் (கறுப்பு/நீலம்) வங்கியினால் வழங்கப்பட்ட காசோலை இதழ்களின்மீதும் மட்டுமே தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். ஒவ்வொரு மாற்றமும் வரைபவரின் முழுக் கையொப்பத்தின்/கையொப்பங்களின்மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். மின்சார/இலத்திரனியல் தட்டச்சுக் கருவிகளும் அழிக்கப்படத்தக்க மையும் காசோலைகளை வரைவதற்காகப் பயன்படுத்தப்படுதலாகாது. உடனடியாகக் கண்டுபிடிக்கப்படமுடியாத மாற்றங்களிலிருந்து எழுகின்ற இழப்புக்காக வங்கி பொறுப்பாதலாகாதெனக் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் ஒப்புக்கொள்கின்றார் (ஒப்புக்கொள்கின்றனர்).

### 3.2.8 கொடுப்பனவுகளை நிறுத்திவைத்தல்

கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள், காசோலை இதழ்கள் தொலைந்து போனால்/திருடப்பட்டால் அல்லது தவறவிடப்பட்டால், காசோலை இலக்கம், திகதி, தொகை மற்றும் பணம்பெறுபவரின் பெயர் என்பவற்றைக் கொடுத்து கொடுப்பனவை நிறுத்திவைக்கும்படி உடனடியாக எழுத்தில் வங்கியை அறிவுறுத்துதல் வேண்டும். அத்தகைய எல்லா அறிவுறுத்தல்களும், சம்பந்தப்பட்ட காசோலை/காசோலைகள்மீது அத்தகைய அறிவுறுத்தல் பெறப்பட்ட நேரம்வரை பணஞ்செலுத்தப்படாதிருப்பின் மட்டுமே பயனுறுவனவாகும். தொலைபேசிமூலம் விடுக்கப்பட்ட கொடுப்பனவை நிறுத்திவைப்பதற்கான அறிவுறுத்தல்கள் 48 மணித்தியாலங்களுள் எழுத்தில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். 48 மணித்தியாலங்களுள் அத்தகைய எழுத்திலான அறிவுறுத்தல்கள் பெறப்படாவிடின், கணக்குவைத்திருப்பவருக்கு/வைத்திருப்பவர்களுக்கு ஏதேனும் அறிவித்தலின்றி கொடுப்பனவை நிறுத்திவைப்பதற்கான அறிவுறுத்தலை இரத்துச்செய்வதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது. வங்கியானது, 48 மணித்தியாலங்களினுள் எழுத்தில் உறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவை நிறுத்திவைப்பதற்கான அறிவுறுத்தல்களின்மீது செயலாற்றாமைக்காகப் பொறுப்புடையதாதலாகாது.

ஒரு காசோலைக்கான கொடுப்பனவுக்கு எதிர்க்கட்டளை ஆக்கப்படும்போது, முன்வைக்கப்படுவதன்மீது காசோலைக்குப் பணஞ்செலுத்தப்படாமையிலிருந்து விளைகின்ற ஏதேனும் இழப்புக்கெதிராகக் கணக்குவைத்திருப்பவர் வங்கிக்கு நட்டோத்தரவாதமளிப்பார், காசோலைகள் மீளப்பெறப்படின் அல்லது அழிக்கப்படின் அல்லது கொடுப்பனவை நிறுத்திவைப்பதற்கான கட்டளை இரத்துச்செய்யப்படவேண்டியிருப்பின் எழுத்தில் உடனடியாக வங்கிக்கு அறிவிப்பார், கவனப்பிசகு அல்லது கவனயீனத்தினூடாக அல்லது காசோலையின் பிறழ்நெறிப்படுத்துகையினூடாக வங்கியினால் காசோலைக்குப் பணஞ்செலுத்தப்பட்டிருப்பின் அல்லது அது சான்றுப்படுத்தப்பட்டிருப்பின் வங்கியைப்

பொறுப்புடையதாக்கமாட்டார் என உடன்பட்டுக்கொள்ளப்படுகின்றது. ஓர் எதிர்க்கட்டளை எழுத்திலிருந்தாலொழிய மற்றும் நிறுத்திவைக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட காசோலையின் சரியான விபரங்களைக் கொண்டிருந்தாலொழிய ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எதிர்க்கட்டளையை இரத்துச்செய்தல் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன் இரத்துச்செய்கை பெறப்பட்ட காலத்துக்கும் நிறுத்திவைக்கப்பட்ட காசோலை முன்வைக்கப்படும் காலத்துக்குமிடையே நியாயமானவொரு காலம் கழியும்வரை பயனுறவும்மாட்டாது. கொடுப்பனவை நிறுத்திவைப்பதற்கான கட்டளை எழுத்தில் புதுப்பிக்கப்பட்டாலொழிய ஆறுமாதங்களுக்கு மட்டுமே பயனுறுதல் வேண்டும். (வங்கியின் தற்றுணிபில் நிர்ணயிக்கப்பட்ட) விதிப்பனவொன்று, காசோலையொன்றின் கொடுப்பனவை நிறுத்திவைப்பதற்காக வாடிக்கையாளரொருவரினால் விடுக்கப்பட்ட ஒவ்வொரு கோரிக்கைக்கும் வங்கியினால் அறவிடப்படும்.

3.2.9 காசோலைப் புத்தகங்கள் பாவனையில் இல்லாதபோது அவை காப்பானவோர் இடத்தில் வைத்திருக்கப்படுவதனைக் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3.2.10 ஒன்றில் வாடிக்கையாளரினால் அல்லது வங்கியினால் கணக்கொன்று மூடிவிடப்படுவதன்மேல் வாடிக்கையாளருக்கு முன்னர் வழங்கப்பட்டு பயன்படுத்தப்படாதெஞ்சியுள்ள எல்லாக் காசோலைப் படிவங்களும் வங்கியின் ஆதனமாதல் வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளர் அவற்றை உடனடியாக வங்கிக்குத் திருப்பிக்கொடுத்தலும் வேண்டும்.

3.2.11 இதன்கண் தரப்பட்டுள்ள ஏனைய நியதிநிபந்தனைகளுக்கமைய, எந்தப் பல்வேறு காசோலைகளின் அல்லது உண்டியல்களின் மொத்தத்தொகை கிடைக்கக்கூடிய நிதிகளின் தொகையை விஞ்சுகின்றதோ அந்தப் பல்வேறு காசோலைகள் அல்லது உண்டியல்கள் உடனிகழ்வாக வங்கிக்கு முன்வைக்கப்படும் விடயத்தில்

எக்கணக்கின்மீது வரையப்படுகின்றனவோ அக்கணக்கில் கிடைக்கக்கூடிய நிதிகளிலிருந்து எந்தக் காசோலைகளுக்கு அல்லது உண்டியல்களுக்குப் பணஞ் செலுத்தப்படுமெனத் தெரிவுசெய்வதற்கு வங்கி உரித்துடையதாகவுள்ளது,

**3.3 மீளப்பெறுகைகள்**

3.3.1 வங்கியுடன் செய்யப்பட்ட விசேட முன்னொழுங்கேற்பாட்டின் மூலமாகத்தவிர, கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் தமது கணக்குகளிலிருந்து மிகையாகப்பெறுதலாகாது. கணக்கில் போதிய நிதிகள் இல்லாவிடின் காசோலைகளைத் திருப்பிக்கொடுப்பதற்கு/அவற்றுக்கு மதிப்பளிக்காதிருப்பதற்கு வங்கி உரிமைகொண்டுள்ளது. திருப்பிக்கொடுக்கப்பட்ட ஒவ்வொரு காசோலையின்மீதும் விதிப்பனவுசெய்வதற்கான உரிமையையும் வங்கி ஒதுக்கிவைக்கின்றது. வங்கி அதன் தனித்தற்றுணிபின்படி கணக்கிலிருந்து மிகையாகப்பெறுகின்ற ஒரு காசோலைக்கு/காசோலைகளுக்கு மதிப்பளிக்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள், கோரிக்கையின்மீதும், நிபந்தனையின்றியும், வட்டியுடனும் விதிப்பனவுகளுடனும் மிகையாகக்பெறப்பட்ட தொகையை மீளச்செலுத்துவதற்குக் கடப்பாடுடையவராகவுள்ளார்/கடப்பாடுடையவராகவுள்ளனர். எத்தகையதுமான மேலதிகப்பற்று வசதியையும் வங்கி அளிப்பதற்குப் பிணிக்கப்படுகின்றது என ஒன்றில் வெளிப்படையான அல்லது உட்கிடையான உடன்படிக்கையாக இது பொருளமைத்துக்கொள்ளப்படலாகாது.

3.3.2 காலத்துக்குக்காலம் சட்டத்தின்மூலம் குறித்துரைக்கப்படுகின்றவாறு கொடுக்கல்வாங்கல்களின்மீது நிலவுகின்ற, எல்லா நிலவுகின்ற அரசாங்க அறவீடுகளும் வரிகளும் கணக்குவைத்திருப்பவரிடமிருந்து/வைத்திருப்பவர்களிடமிருந்து விதிப்பனவுசெய்யப்படுதல் வேண்டும். சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதன் விளைவாகக் கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் உறப்பட்ட

உரிமைக்கோரிக்கைகள் அல்லது இழப்புக்கள் அல்லது வேறுவகையானவற்றின்மீது வங்கி பொறுப்பெதனையும் ஏற்பதில்லை.

## 4. காலவைப்புக்கள்

### 4.1 பதிவுக் கட்டளைக்கற்கள்

4.1.1 ரூபாக் காலவைப்புக் கணக்குத் திறக்கப்படக்கூடிய குறைந்தபட்ச வைப்பு பத்தாயிரம் (ரூ.10,000/-) இலங்கை ரூபாவாதல் வேண்டும். ரூபாக் காலவைப்புக் கணக்குக்குத் தேவைப்பட்ட தொடக்க வைப்பை ஏதேனும் முன்னறிவித்தலின்றி வங்கி மாற்றலாம். வங்கி அதன் தனித்தற்றுணிபில் குறைவான தொடக்க வைப்புப் பெறுமதிகளுடனான கணக்குகளைத் திறக்கும்.

### 4.2 மீளப்பெறுகைகள்

4.2.1 காலவைப்புக்கள் முதிர்வின்மீது மட்டுமே மேலுயர்த்தப்படலாம். எவையேனும் காலவைப்புக்களின் முதிர்வு வரும்படிகள், முதிர்வுத் திகதியை உடனடுத்துவரும் வேலைநாளன்று மட்டுமே கிடைக்கக்கூடியனவாக்கப்படும்; ஆயின், நிதிகளை மீளமுதலீடுசெய்வதற்கான அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருத்தலாகாது.

4.2.2 முரணாகக் குறிக்கின்ற அறிவுறுத்தல்கள் இல்லாதபோது, காலவைப்புக்கள், முதிர்வின்மீது, முதிர்வு நாளன்று நிலவுகின்ற வட்டிவீதத்தில் ஒத்த காலப்பகுதியொன்றுக்குப் புதுப்பிக்கப்படும்.

4.2.3 எவ்வாறாயினும், வங்கி அதன் தற்றுணிபில் கணக்குவைத்திருப்பவரினால்/வைத்திருப்பவர்களினால் விடுக்கப்படும் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட (வங்கிக்கு விடுக்கப்பட்ட பணிப்பாணைக்கிணங்க) எழுத்திலான கோரிக்கைகளின்மேல் முதிர்வுக்குமுன்னர் காலவைப்புக்களை விடுவிக்கும். வங்கியின்

தனித்தற்றுணிபின்படி முதிர்வுக்குமுன்னர் விடுவிக்கப்பட்ட காலவைப்புகள், வைப்பானது வங்கியுடன் இருந்த காலப்பகுதியைப் பொறுத்து, தண்டமுறையான வட்டிக்கு அமைந்தனவாகும்.

4.2.4 மேலதிக வைப்புடன் ஒன்றுதிரட்டுவதற்காக வைப்புக்களின் ஏதேனும் மேலுயர்வும் முதிர்வுக்குமுன்னர் ஏலவேயுள்ள வைப்புத்தொகையை அதிகரிப்பதற்கு மீளவைப்பிலிடுதலும், வைப்பானது வங்கியுடன் இருந்த காலப்பகுதியைப் பொறுத்து, தண்ட விதிப்பனவுகளுக்கு அமைந்ததாதலும் வேண்டும்.

4.2.5 காலவைப்புக்களின் மீளப்பெறுகைகளின்மீதும் வட்டிக்கொடுப்பனவுகளின்மீதும் ஒழுங்குபடுத்துநர்கள் மட்டுப்பாடுகளை விதிக்கும் பட்சத்தில் கணக்குவைத்திருப்பவர்/வைத்திருப்பவர்கள் அத்தகைய மட்டுப்பாடுகளின்மீது பிணிக்கப்பட்டவராதல்/பிணிக்கப்பட்டவர்களாதல் வேண்டும்.

## 4.3 வட்டி

4.3.1 ரூபாக் காலவைப்புக்களின் வட்டிவீதம், முதிர்வுவரை ஏலவேயுள்ள காலவைப்புக்கள்மீது இடப்பட்ட வட்டிவீதத்தை வங்கி வேறுபடுத்தமாட்டாதென்பதனைத்தவிர, அறிவித்தலின்றி மாற்றத்துக்கு அமைந்ததாகும்.

## 5. சிறுவர் சேமிப்புக்கணக்குகள் (பராயமடையாதோர் சேமிப்புகள்)

## 5.1 பதிவுக் கட்டளைக்கற்கள்

5.1.1 கார்கில்ஸ் வங்கி சிறுவர் சேமிப்புக்கணக்கு (கணக்கு), பராயமடையாதவரின் பெயரில் (கணக்குவைத்திருப்பவர்) திறக்கப்படும் என்பதுடன் கணக்கினுள்ளான வைப்புக்கள் எவரேனுமாளினால் இடவும்படலாம்.

5.1.2 கணக்கைத் திறப்பதற்கான குறைந்தபட்சத் தொடக்க வைப்பு ஐந்நூறு ரூபா மட்டுமேயாகும் (ரூ.500.00) என்பதுடன் காலத்துக்குக்காலம் மாற்றத்துக்கமைந்ததுமாகும்.

5.1.3 பிறப்புகள் பதிவாளரினால் வழங்கப்பட்ட கணக்குவைத்திருப்பவரின் மூலப் பிறப்புச் சான்றிதழ் வங்கியினால் நுனித்தாராயப்படுவதற்காகக் கணக்குத் திறக்கும் நேரத்தில் காண்பிக்கப்படுதல் வேண்டும். வங்கியானது சொல்லப்பட்ட பிறப்புச் சான்றிதழின் நிழற்படப்பிரதியைப் பதிவேட்டுக்காக வைத்திருக்கும்.

5.1.4 கணக்குக்கு ஏற்புடையதான வட்டிவீதம் முன்னறிவித்தலின்றி மாற்றத்துக்கமைந்ததாகும்.

5.1.5 கணக்கின்மீது செய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நாளதுவரையாக்குவதற்குக் கணக்குவைத்திருப்பவருக்குப் பற்றுவரவுப்பதிவேடொன்று வழங்கப்படும்.

5.1.6 கணக்குவைத்திருப்பவர் 18 வயதையடைவதன்மேல் வழமையான சேமிப்பு வட்டிவீதங்கள் ஏற்புடையனவாகும். பராயமடையாதவரின் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பதன்மேலும் அவசியமான ஆவணப்படுத்துகையை நிரப்பியதன்மேலும் கணக்கானது (குறைந்தபட்சக் கிரமமான சேமிப்புக்கணக்கு மீதித் தேவைப்பாட்டுக்கமைய) கிரமமான சேமிப்புக்கணக்கொன்றாக மாற்றப்படும்.

5.1.7 கணக்குவைத்திருப்பவர் இறக்கும் பட்சத்தில் கணக்கின் வரும்படிகள் இலங்கையின் மரணசாதனமில்லா அடுத்துறுகைச் சட்டங்களுக்கிணங்கச் செலுத்தீடுசெய்யப்படுதல் வேண்டும்.

5.1.8 எந்தக் கணக்குவைத்திருப்பவரின் பெயரில் கணக்குத் திறக்கப்படுகின்றதோ அந்தக் கணக்குவைத்திருப்பவர் கணக்குக்கு இடப்பட்ட வைப்புக்களின் நன்மைபெறுநராவார். ஆகவே கணக்குவைத்திருப்பவர் 18 வயதையடையும்வரை மீளப்பெறுகைகள்/கணக்கின் மூடுகை எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. எவ்வாறாயினும், பெற்றோர் உயிரோடில்லாத பட்சத்தில் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பெற்றோரின்/பாதுகாவலரின் விண்ணப்பத்தின்மீது உயர்கல்வி, அவசர மருத்துவம் போன்ற கணக்குவைத்திருப்பவருக்கு நன்மைபயக்கும் நோக்கங்களுக்காக அல்லது காரணங்களுக்காக வங்கியின் தனித்தற்றுணிபில் மட்டுமே மீளப்பெறுகைகள் அனுமதிக்கப்படும். அத்தகைய மீளப்பெறுகைகளுக்கான/மூடுகைக்கான கோரிக்கையின் செல்லுபடியாந்தன்மையைத் தீர்மானிப்பதற்கு வங்கி தனியுரிமை கொண்டுள்ளதுடன் அதனைச் செல்லுபடியாக்குவதற்கு ஆவணச் சான்றையும் தேவைப்படுத்தலாம்.

5.1.9 கணக்குவைத்திருப்பவர்/பெற்றோர்/பாதுகாவலர் (கூட்டாக "வாடிக்கையாளர்") கொடுக்கல்வாங்கல்கள்பற்றிய பதிவேடுகளைப் பேணிக்காப்பதற்குப் பொறுப்பாகவுள்ளார். கொடுக்கல்வாங்கல் அறிவுரைகள், கூற்றுக்கள் என்பன வங்கியிடமிருந்து கோரப்படின், வங்கியானது அதன் வெளியிடப்பட்ட காப்புவரிக்கிணங்க இச்சேவையை வழங்குவதற்காக விதிப்பனவுகளை அறவிடுவதற்கான உரிமையை ஒதுக்கிவைக்கின்றது.

5.1.10 வங்கியானது பிழை காரணமாக வாடிக்கையாளரின் கணக்குக்கு வரவுவைக்கும் பட்சத்தில், வங்கி எக்கட்டத்திலும் சொல்லப்பட்ட பதிவை எதிர்மாறாக்குவதற்கும் அத்துடன்/அல்லது வாடிக்கையாளரிடமிருந்து சொல்லப்பட்ட தொகையை உரிமைகோருவதற்கும் உரித்துடையதாகும்.

## 6. அழைப்புநிலையச் சேவைகளும் அழைப்புநிலையச் சேவை நட்டோத்தரவாதமும்

இதனகத்துப்பின்னர், அழைப்புநிலையச்சேவைகளும் அழைப்புநிலையச் சேவை நட்டோத்தரவாதமும் தொடர்பான நியதிநிபந்தனை (வாசகம் 6.2) மற்றும் ''கணக்கு'' என்ற பதம், கிரமமான சேமிப்புக்கள், நடப்பு, காலவைப்பு, வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், இப்போது அல்லது எதிர்காலத்தில் வங்கி அறிமுகப்படுத்தக்கூடிய வேறேதேனும் வகையினதான விளைபயன் அல்லது சேவை என்பவற்றைக் குறிப்பீடுசெய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கணக்கை/கணக்குகளை வைத்திருப்பவர் ''கணக்குவைத்திருப்பவராகக்'' குறிப்பீடுசெய்யப்படுதலும் வேண்டும்.

6.1 வங்கியினால் வழங்கப்பட்ட அழைப்புநிலையச்சேவைகள் (வங்கியின் தனித்தற்றுணிபில்) பின்வருவன தொடர்பிலான தொலைபேசி அறிவுறுத்தல்களை உள்ளடக்கலாம்:

6.1.1 கணக்குமீதிகள், கடைசிக் கொடுக்கல்வாங்கல்கள் (கணக்குவைத்திருப்பவரின் கணக்குகள் தொடர்பாக), செலாவணி வீதங்கள் மற்றும் வைப்புவீதங்கள் பற்றிய விசாரணை.

6.1.2 கூற்றுக்களுக்கான (தெரிவுரீதியிலான கணக்குகளுக்கான), காசோலைப் புத்தகங்களுக்கான (இரண்டாவது காசோலைப் புத்தகத்திலிருந்தும் அதன்பின்னரும்) மற்றும் கணக்குவைத்திருப்பவரின் கணக்குத் தொடர்பாகக் காசோலையை நிறுத்திவைத்தற்கான அத்துடன் இயைபான கிளைக்கான மார்க்கத்துக்கான கோரிக்கை.

6.1.3 வங்கி காலத்துக்குக்காலம் அறிமுகப்படுத்தக்கூடியவாறு அத்தகைய வேறுவகையினவான வங்கித்தொழில் அல்லது முதலீட்டுச்சேவைகள்.

6.2 ஏதேனும் சாதனத்தின் பிறழ்பணியாற்றுகை அல்லது பழுது உட்பட வங்கியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட ஏதேனும் காரணத்துக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்றிக்கூறற்பாலனவான எவையேனும் தொலைபேசி அறிவுறுத்தல்களை நிறைவேற்றுவதற்கான ஏதேனும் தவறுதலுக்காக, வங்கி, கணக்குவைத்திருப்பவருக்கு / வைத்திருப்பவர்களுக்குப் பொறுப்பாதலாகாது என்பதுடன் நிறைவேற்றுவதிலிருந்து அல்லது வேறுவகையாக எழுகின்ற அல்லது அதுசம்பந்தமான ஏதேனும் நேரடியான, நேரடியற்ற அல்லது விளைவாந்தன்மையினவான இழப்புக்களுக்காகக் கணக்குவைத்திருப்பவருக்கு வங்கி எச்சூழ்நிலைகளின்கீழும் பொறுப்பாதலுமாகாது; அத்துடன் வங்கி தொலைபேசி அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொண்டு அவற்றின்மீது செயலாற்றுவதிலிருந்து அல்லது செயலாற்றத் தவறுவதிலிருந்து அல்லது அதுசம்பந்தமாக ஒன்றில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் எழுந்துள்ள வழக்குகள், வழக்குநடவடிக்கைகள், உரிமைக்கோரிக்கைகள், இழப்புக்கள், சேதவீடுகள், செலவுதொகைகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுக்கெதிராகவும் கணக்குவைத்திருப்பவர் வங்கிக்கு நட்டோத்தரவாதமளித்தலும் வங்கிக்குத் தீங்கேற்படாது அதனைக் காத்தலும் வேண்டும். இந்நட்டோத்தரவாதம், கார்கில்ஸ் வங்கியுடன் வங்கித்தொழிற் சேவைகள் முடிவுறுத்தப்படுகின்றமை எவ்வாறிருப்பினும், தொடர்ந்திருத்தல் வேண்டும்.

6.3 இதன்கண்ணுள்ள நியதிநிபந்தனைகளைப் பின்பற்றித் தொலைபேசி அறிவுறுத்தல்களை விடுப்பதற்குக் கணக்குவைத்திருப்பவரின் உரிமை, எல்லா நேரங்களிலும் வங்கியின் தற்றுணிபுக்கமையவிருத்தல் வேண்டுமென்பதுடன் வங்கி எந்நேரத்திலும் முன்னறிவித்தலின்றி அத்தகைய உரிமையை இல்லாதொழிக்கலாம்.

6.4 தொலைபேசி அல்லது வேறு அறிவுறுத்தல்களின் நோக்கத்துக்காகக் கணக்கு வைத்திருப்பவரின் கணக்கில் போதிய நிதிகள் (அல்லது முன்னோழுங்கேற்பாடு செய்யப்பட்ட கடன்வசதிகள்) உள்ளனவெனக் கணக்குவைத்திருப்பவர் / வைத்திருப்பவர்கள் உறுதிப்படுத்தல்வேண்டுமென்பதுடன் வங்கியின் தவறுதலிலிருந்து எழுகின்ற எவையேனும் விளைவுகளுக்காக வங்கி பொறுப்பதலுமாகாது; ஆயின், எப்பொழுதும், அத்தகைய போதாமை எவ்வாறிருப்பினும், வங்கியானது அதன் தனித்தற்றுணிபில் அறிவுறுத்தல்களை நிறைவேற்ற முடிபுசெய்தால், கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து / வைத்திருப்பவர்களிடமிருந்து முன்னங்கீகாரம் நாடாமல் அல்லது அவர்களுக்கு அறிவித்தல் கொடுக்காமல் வங்கி அவ்வாறு செய்யலாம். அத்துடன் கணக்குவைத்திருப்பவர் / வைத்திருப்பவர்கள்,அதன்மூலம் உருவாக்கப்பட்டு விளைகின்ற மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது கடனுக்காகவும் தொடர்புபட்ட எல்லா விதிப்பனவுகளுக்காகவும் பொறுப்பாதல் வேண்டும். மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது கடனானது, வங்கி அதன் தனித்தற்றுணிபில் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய வட்டிவீதங்களுக்கு அமையவிருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கணக்குகளுக்கு ஏற்புடையனவான வங்கியின் வழமையான நியதிநிபந்தனைகளினால் ஆளப்படுதலும் வேண்டும்.

6.5 அழைப்புநிலையத்தினூடாக வழங்கப்பட்ட சேவைகளுக்காக வங்கி ஏலவேயுள்ள காப்புவரியை விதிப்பனவுசெய்தல்வேண்டும்.

6.6 அழைப்பவரின் மெய்யானதன்மையைச் சரிபார்ப்பதற்கு வங்கி நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும், ஆனால் தொலைபேசிமூலம் பெறப்பட்ட அத்தகைய கோரிக்கைகளைப் பின்பற்றி வங்கியினால் புரியப்பட்ட ஏதேனும் செயலுக்காகக் கணக்குவைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்கு அல்லது வேறேவரேனும் திறத்தவருக்கு எத்தகையதுமான எம்முறையிலும் வங்கி பொறுப்பாதலாகாது; ஆயின், வங்கி நல்லெண்ணத்துடன் செயலாற்றுதலும் பாரிய அசட்டைக்குக் குற்றவாளியாக இராதிருத்தலும் வேண்டும்.

6.7 எவரேனும் திறத்தவரினால் வங்கிக்கெதிராகக் கொணரப்படக்கூடிய ஏதேனும் வழக்கில் அல்லது வங்கியினால் அத்தகைய தகவல்கள் வழங்கப்படுவதனைப் பின்பற்றி வங்கியினால் புரியப்பட்ட ஏதேனும் செயல், கருமம் அல்லது காரியத்திலிருந்து எவரேனும் திறத்தவரினால வங்கிக்கெதிராகக் கொணரப்படக்கூடிய அல்லது வங்கியினால் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் உறப்படக்கூடிய வழக்குகள், வழக்குநடவடிக்கைகள், உரிமைக்கோரிக்கைகள், இழப்புக்கள், சேதவீடுகள், செலவுதொகைகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றிலிருந்தும் எல்லா நேரங்களிலும் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் வங்கிக்கு நட்டோத்தரவாதமளிப்பதற்கும் தீங்கேற்படாது அதனைக் காப்பதற்கும் உடன்பட்டுப் பொறுப்பேற்கின்றார்/ பொறுப்பேற்கின்றனர்.

6.8 கணக்குவைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்கு அத்துடன் /அல்லது அழைப்பவருக்கு வங்கியினால் கொடுக்கப்பட்ட எவையேனும் தகவல்கள் தொடர்பில் அல்லது அதன்விளைவாக எவ்வாறாயினும் எழுகின்ற நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் எழுகின்ற ஏதேனும் இழப்பு அல்லது சேதவீடு தொடர்பில் வங்கிக்கெதிரான எத்தகைய உரிமைக்கோரிக்கைகள் எவற்றையும் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் கொண்டிருத்தலாகாதெனக் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் உடன்படுகின்றார் (உடன்படுகின்றனர்); ஆயின், வங்கி நல்லெண்ணத்துடன் செயலாற்றுதலும் பாரிய அசட்டைக்குக் குற்றவாளியாக இராதிருத்தலும் வேண்டும். அழைப்புநிலையச் சேவை முடிவுறுத்தப்படுகின்றமை எவ்வாறிருப்பினும், இந்நட்டோத்தரவாதம் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

## 7. வரிகள்

7.1 எல்லாக் கணக்குவைத்திருப்பவர்களும் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு கணக்குத் திறக்கும் படிவத்தில் தமது வரி அந்தஸ்து மற்றும் வதிவிட அந்தஸ்து பற்றிய நியதிச்சட்ட வெளிப்படுத்துகையை நிரப்புதல் வேண்டுமென்பதுடன் அவர்/அவள் அவரது/அவளது நியதிச்சட்ட வெளிப்படுத்துகைகளையும் அவர்களின் வரி அந்தஸ்தையும் நேரகாலத்துடனானவொரு முறையில் நிரப்புவதனை உறுதிப்படுத்துவது கணக்குவைத்திருப்பவரின் பொறுப்பாகும். கணக்குவைத்திருப்பவர் நேரகாலத்துடனானவொரு முறையில் அவரது/அவளது வரிகளை அவர்/அவள் வெளிப்படுத்தத் தவறுதலுட்பட, கணக்குவைத்திருப்பவர் எம்முறையிலும் எதிர்நோக்கும் எவையேனும் வரிச்சிக்கல்களின்மீது வங்கி பொறுப்புடைமையெதனையும் கொண்டிருத்தலாகாது. கணக்குவைத்திருப்பவரினால்/ வைத்திருப்பவர்களினால் செய்யப்பட்ட நியதிச்சட்ட வெளிப்படுத்துகை அதே பணிப்பாணையின்மூலம் திறக்கப்பட்டு ஆளப்பட்ட ஏலவேயுள்ள மற்றும் புதிய கணக்குகள் எல்லாவற்றிற்கும் ஏற்புடையதாகும். பிடித்துவைத்தல் வரி அல்லது வட்டிக்கொடுப்பனவுகளின்மீது செலுத்தற்பாலதான வேறேதேனும் வரி, காலத்துக்குக்காலம் உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் விதிக்கப்பட்டவாறான காலப்பகுதிக்காக (அத்தகைய வீதத்தில் அல்லது வீதங்களில்) செலுத்தற்பாலதான வட்டியிலிருந்து வங்கியினால் கழிக்கப்படும். உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தினால் வங்கியிடமிருந்து அடுத்துப்பின்னர் உரிமைகோரப்படின், கணக்குவைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்கு ஏதேனும் அறிவித்தலின்றிக் கணக்குவைத்திருப்பவரிடமிருந்து/ வைத்திருப்பவர்களிடமிருந்து சேகரிக்கப்படாத பிடித்துவைத்தல் வரிகளை அறவிடுவதற்கு வங்கி உரிமைகொண்டுள்ளது.

## 8. வரி இணங்கியொழுகுகை

8.1 கணக்கை (கணக்குகளைத்) திறத்தலும் பயன்படுத்துதலும் அல்லது எம்மால் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பாகவும் உங்கள் வரிக்கடப்பாடுகள் எந்த நியாயாதிக்கங்களில் எழுகின்றனவோ அந்த எல்லா நியாயாதிக்கங்களிலும் (வரிக்கொடுப்பனவு அல்லது இயைபான எல்லா வரிகளையும் கொடுப்பனவு செய்தல் தொடர்பான விபரத்திரட்டுக்களை அல்லது வேறு தேவைப்பட்ட ஆவணப்படுத்துகையைக் கோப்பிடுதலுட்பட) அக்கடப்பாடுகளை விளங்கிக்கொண்டு அவற்றுக்கு இணங்கியொழுகுவதற்கு நீங்கள் தனியாகப் பொறுப்புடையவரென நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்கள். சம்பந்தப்பட்ட ஓராள் என்ற தன்மையில் செயலாற்றுகின்ற ஒவ்வொரு சம்பந்தப்பட்ட ஆளும் (அவரது தனிப்பட்ட தன்மையிலல்ல) அவரது சொந்தச் சார்பில் அதே ஒப்புக்கோடலையும் செய்கின்றார். சம்பந்தப்பட்ட ஓர் ஆளின் அல்லது உங்களின் வாழிடம், வதிவிடம், பிரசாவுரிமை அல்லது கூட்டிணைப்பு என்பவற்றைப் பொருட்படுத்தாது குறித்தசில நாடுகள் ஆள்புலத்துக்குவெளியே பயனுள்ள வரிச் சட்டவாக்கத்தை உடையனவாகவிருக்கலாம். கார்கில்ஸ் வங்கி ஆகிய நாம் வரி அறிவுரையை வழங்குவதில்லை. சுயேச்சையான சட்ட மற்றும் வரி அறிவுரையை நாடும்படி உங்களுக்கு அறிவுரை வழங்கப்படுகின்றது. கணக்கை (கணக்குகளைத்) திறத்தலுடனும் பயன்படுத்தலுடனும் எம்மால் வழங்கப்பட்ட சேவைகளுடனும் குறிப்பாகத் தொடர்புபடக்கூடிய எந்தக் கடப்பாடுகளுமுட்பட ஏதேனும் நியாயாதிக்கத்தில் எழக்கூடிய உங்கள் வரிக் கடப்பாடுகள் தொடர்பில் நாம் பொறுப்புடைமையை ஏற்கமாட்டோம்.

## 9. ஆளுகின்ற சட்டமும் நியாயாதிக்கமும்

9.1 இந்நியதிநிபந்தனைகள் இலங்கைச் சட்டங்களுக்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் பயனுடையனவாதலும் வேண்டுமென்பதுடன் இலங்கை நீதிமன்றங்களில் வழக்குநடவடிக்கைகள் கொணரப்படுலும் வேண்டும்; ஆயின்,

எப்பொழுதும், வங்கி அவ்வாறு விரும்பினால், அது தகுதியானதெனக் கருதினால் வேறேதேனும் நாட்டின் அல்லது நியாயாதிக்கத்தின் நீதிமன்றங்களில் வழக்குநடவடிக்கைகளைத் தொடுக்கலாம்; இப்பட்சத்தில் அத்தகைய நீதிமன்றங்களுக்கு ஏற்புடையனவான சட்டங்கள் ஏற்புடையனவாதல் வேண்டுமென்பதுடன் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் அத்தகைய நீதிமன்றங்களுக்கும் அத்தகைய வேறு சட்டங்களுக்கும் அமைந்தொழுக உடன்படுதலும் வேண்டும்; அத்துடன் உறப்பட்ட எவையேனும் சட்டச் செலவுதொகைகள், நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் சட்டவறிஞர் கட்டணங்கள் என்பன கணக்குவைத்திருப்பவரின்/ வைத்திருப்பவர்களின் கடன்பாட்டுடன் சேர்க்கப்படுதல் வேண்டும்.

**10. ஏனைய பொது வாசகங்கள்**

10.1 நம்பிக்கைப்பொறுப்புக்களினால் திறக்கப்பட்ட கணக்குகளுக்காக, மேலதிக நியதிநிபந்தனைகள் ஏற்புடையனவாகலாம்.

10.2 மீளப்பெறுகைகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளின்மீது ஒழுங்குபடுத்துநர்கள் மட்டுபாடுகளை விதிக்கும் பட்சத்தில் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் அத்தகைய மட்டுப்பாடுகளினால் பிணிக்கப்படுதல் வேண்டும்.

10.3 கணக்குவைத்திருப்பவரின் / வைத்திருப்பவர்களின் அறிவுக்கெட்டியவரை வங்கிக்குக் கொடுக்கப்பட்ட எல்லாத் தகவல்களும் (கணக்குத்திறக்கும் படிவத்திலாயினும்சரி அல்லது வேறுவகையாகவாயினும்சரி) உண்மையானவையும் செம்மையானவையுமெனக் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் நம்புறுதி செய்கின்றார்/ செய்கின்றனர். இத்தகவல்களிலான ஏதேனும் மாற்றம் பற்றி வங்கிக்கு

உடனடியாக அறிவிப்பதற்குக் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் பொறுப்பேற்கின்றார் (பொறுப்பேற்கின்றனர்).

10.4 தொடர்பாடல் நோக்கங்களுக்காக வங்கிக்கு அறிவிக்கப்படுகின்ற கணக்குவைத்திருப்பவரின்/ வைத்திருப்பவர்களின் ஏதேனும் முகவரி மாற்றமும் வேறு தொடர்பு விபரங்களும்பற்றி ( தொலைபேசி, மின்னஞ்சல் முதலியன) வங்கிக்கு உடனடியாக எழுத்தில் அறிவுரை வழங்கப்படுதல் வேண்டும்.

10.5 அஞ்சல்மூலம் அனுப்பப்பட்ட இதன்கீழான ஏதேனும் அறிவித்தல், வங்கிக்கு எழுத்தில் கடைசியாக அறிவிக்கப்பட்ட முகவரிக்கு அஞ்சலிலிடப்பட்டதிலிருந்து 7 வேலைநாட்களினுள் கணக்குவைத்திருப்பவரினால் / வைத்திருப்பவர்களினால் பெறப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல்வேண்டும்.

**10.6 கூட்டுக்கணக்குகள்**

10.6.1 ஒரு வாடிக்கையாளர் கணக்கு ஒரு கூட்டுக்கணக்காகவிருக்கும் பட்சத்தில், வட்டி, தரகுகள் மற்றும் வேறு வங்கித்தொழில் விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் எல்லாவற்றுடனும் அத்தகைய ஏதேனும் கணக்குக்கு வழங்கப்படவேண்டிய ஏதேனும் மேலதிகப்பற்று, கடன் அல்லது வேறு கடன்வசதிகள் அல்லது நிதிவசதிக்காகக் கூட்டாக வைத்திருப்பவர்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாதல் வேண்டும்.

10.6.2 வாடிக்கையாளர் இறப்பதன்மீதான நடவடிக்கைமுறை

கூட்டுக்கணக்கின் வாடிக்கையாளர்களுள் ஒருவர் அல்லது எவரும் இறக்கும் பட்சத்தில், வங்கி, வாடிக்கையாளர்களின் உயிர்வாழ்பவருக்கு அல்லது உயிர்வாழ்பவர்களுக்கு அல்லது அவர்களின் கட்டளைக்கு, அவசியமானவிடத்து

வாடிக்கையாளரின் கூட்டுக்கணக்கு வைத்திருப்பவர்களின் ஏதேனும் கணக்குக்கு அல்லது கணக்குகளுக்கு வங்கியின் வரவுக்கிருக்கும் அல்லது அதனால் வைத்திருக்கப்பட்ட எத்தகையனவுமான எல்லாப் பணங்களையும், பிணைப்பொறுப்புறுதிகளையும், ஆவணங்களையும், வேறு ஆதனங்களையும் (பிணைப்பொறுப்புப் பெட்டிகளும் வேறு உள்ளீடுகளுமுட்பட) செலுத்துதல் மற்றும் ஒப்படைத்தல் வேண்டும்.

10.6.3 அறிவித்தல்கள்

அவசியமானவிடத்து கூட்டுக்கணக்குவைத்திருப்பவர்களின் நிரலிலுள்ள பெயர்களுள் முதலாவதற்கு அறிவித்தல்கள் அனுப்பப்படவேண்டும்.

## 11. வங்கிச்சேவைகளுக்கான செலவு

11.1 வட்டி, விதிப்பனவுகள் மற்றும் பிரத்தியேகச் செலவுகள்

11.1.1 வட்டியும் விதிப்பனவுகளும்

காலத்துக்குக்காலம் வங்கியுடன் எழுத்தில் உடன்பட்டுக்கொள்ளப்பட வேண்டிய அத்தகைய வீதத்திலும் (வீதங்களிலும்), அத்தகைய அடிப்படையிலும் அல்லது அடிப்படைகளிலும், அத்தகைய நேரத்திலும் (நேரங்களிலும்) வங்கிக்கு வருமதியான பணங்களின்மீது வாடிக்கையாளர் வட்டி செலுத்துதல்வேண்டும் அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய எழுத்திலான உடன்படிக்கை இல்லாதவிடத்து, கிளையிலும் எமது இணையத்தளத்திலும் கிடைக்கக்கூடியனவாக்கப்படுபவையும் வாடிக்கையாளரினால் செலுத்தப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் வட்டிவீதங்கள், கட்டணங்கள் மற்றும் தரகுகள் எவையேனுமிருப்பின் அவையுட்பட்டவையுமான வங்கியின் பொது விதிப்பனவுகள் தொடர்பான தகவல்கள் வங்கியின் காப்புவரியில் அடங்கியுள்ளன.

கணிப்பீட்டு முறை

வங்கியின் வட்டிக் கணக்கிடுகைச் சூத்திரம் பின்வருமாறாகும். வங்கியின் எல்லாச் சொத்து மற்றும் பொறுப்பு விளைபயன்களுக்கு இது ஒத்ததாகவுள்ளது. இச்சூத்திரம் வங்கியினால் அதன் தனித்தற்றுணிபில் காலத்துக்குக்காலம் வங்கியினால் மாற்றப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

மீதி அடிப்படை *வட்டிவீதம்/100* வட்டி அடிப்படை

குறிப்பு: வட்டி அடிப்படை நாணயத்தின்மீது தங்கியுள்ளது. உதாரணமாக, இரு உள்ளபடியானது/உள்ளபடியானது, ஐஅடொலர் உள்ளபடியானது/360.

11.1.2 காலங்கடந்த தொகைகள்மீதான வட்டி

வருமதியாகவுள்ளபோது செலுத்தப்படாத தொகைகள்மீது அல்லது முன்னுடன்படிக்கையின்றி மிகையாகப் பெறப்பட்ட தொகைகள்மீது வங்கி அதன் தற்றுணிபில் உயர்வான வட்டிவீதத்தை விதிப்பதற்கு உரித்துடையதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய வட்டி வங்கியினால் தீர்மானிக்கப்பட்டவாறு காலாகாலம் இணக்கவும்படலாம்.

11.1.3 வேறுபடத்தக்க வட்டியும் விதிப்பனவுகளும்

வேறுபடத்தக்க வட்டிவீதக் கடன்களின் விடயத்தில், வட்டிவீதம் முறையான உடன்படிக்கையின் நியதிகளுக்கிணங்கச் சரிசெய்யப்படும். வேறுவகையாக எழுத்தில் உடன்பட்டுக்கொள்ளப்பட்டாலொழிய, சேவைகளுக்கான விதிப்பனவுகள் வங்கியின் நியாயமான தற்றுணிபின்படி அதனால் மாற்றப்படலாம்.

11.1.4 ஆகுசெலவுகளும் செலவுகளும்

வாடிக்கையாளர், கோரிக்கையின்மேல் உடனடியாக வங்கிக்குப் பணஞ்செலுத்துதல் அல்லது திருப்பிக்கொடுத்தல் வேண்டுமென்பதுடன் வங்கியானது, வாடிக்கையாளருக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருப்பினுஞ்சரி அல்லதாயினுஞ்சரி வங்கியினால் வழமையாக விதிக்கப்பட்ட எல்லாத் தரகுகளையும் வேறு விதிப்பனவுகளையும், இப்பொது நிபந்தனைகளும், விசேட நிபந்தனைகளும் அல்லது சட்டச் செலவுகளுட்பட வங்கிக்கும் வாடிக்கையாளருக்கும் இடையேயான வேறேதேனும் உடன்படிக்கையும் சம்பந்தமாக வங்கியினால் உறப்பட்ட வேறெல்லாச் செலவுகளையும், விதிப்பனவுகளையும், பிரத்தியேகச் செலவுகளையும், வேறு செலவுகளையும் வாடிக்கையாளரின் ஏதேனும் கணக்குக்கு (கணக்குகளுக்குப்) பற்றுவைப்பதற்கு, வங்கி உரித்துடையதாதலும் வேண்டும்.

11.1.5 வரிகளும் ஏனைய அறவீடுகளும்

வாடிக்கையாளருடன் வங்கி நிறைவேற்றிய கொடுக்கல்வாங்கல்களின்மீது செலுத்தற்பாலனவாக இருக்கக்கூடிய எல்லா நியதிச்சட்ட அறவீடுகளையும், முத்திரைத்தீர்வைகளையும், வேறு அறவீடுகளையும் வங்கிக்குத் திருப்பிக்கொடுப்பதற்கும் வாடிக்கையாளர் பொறுப்பாதல் வேண்டும்.

11.2 வங்கி அதன் தனித்தற்றுணிபில் தகுதியானதெனக் கருதுகின்றவாறு சேவைக்கட்டணங்களையும் அத்துடன்/அல்லது வேறு விதிப்பனவுகளையும் காலத்துக்குக்காலம் விதிப்பதற்கான உரிமையை வங்கி ஒதுக்கிவைக்கின்றது.

11.3 வங்கி அதன் தனித்தற்றுணிபில் தகுதியானதெனக் கருதுகின்றவாறும் முன்னறிவித்தலின்றியும், காலத்துக்குக்காலம், சேவைக் காப்புவரிக்கும் இதன்கண்ணுள்ள எவையேனும் நியதிநிபந்தனைகளுக்கும் எதனையும் சேர்ப்பதற்கும், அவற்றை நீக்குவதற்கும் அல்லது வேறுபடுத்துவதற்குமான உரிமையை வங்கி ஒதுக்கிவைக்கின்றது. வங்கியின் விதிப்பனவுகள்பற்றிய காப்புவரி www.cargillsbank.com இல் வங்கியின் அலுவலகமுறையான இணையத்தளத்தில் கிடைக்கும் அத்துடன்/ அல்லது கோரிக்கையின்மேல் வங்கியின் ஏதேனும் கிளையலுவலகத்திலிருந்து அத்துடன்/அல்லது கூற்றுச்செய்திகளினூடாகக் கணக்குவைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் கணக்குவைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்கு அத்தகைய அறிவித்தலைக் கொடுப்பதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

12. **தரவுகளின் வைத்திருக்கையும் தேக்கமும்**

வங்கியினால் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்குக் கூற்றுக்களின், உறுதிச்சீட்டுகளின், மீளப்பெறுகை/ வைப்புநறுக்குகளின், காசோலைகளின் அல்லது கணக்குகளில் காணப்படுகின்ற வேறெவையேனும் கொடுக்கல்வாங்கற் பதிவேடுகளின் பிரதிகளை வங்கி வைத்திருக்கும். அத்தகைய எல்லாப் பதிவேடுகளும் விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குப்பின்னர் அழித்துவிடப்படுமென்பதுடன் கூற்றுக்களின் அல்லது கொடுக்கல்வாங்கற் பதிவேடுகளின் பிரதிகளை அத்தகைய காலப்பகுதிக்குப்பின்னர் வழங்குவதற்கான ஏதேனும் பொறுப்பை அல்லது பொறுப்புடைமையை வங்கி ஏற்கவும்மாட்டாது.

கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் தொடர்பான கணக்குத்தகவல்களுட்பட்ட எல்லாத்தரவுகளும் கடத்தப்படலாம் அத்துடன்/ அல்லது ஏதேனும் அமைவிடத்தில் தேக்கிவைக்கப்படலாம் அல்லது வைத்திருக்கப்படலாமெனவும் பின்வருவோரினால் அணுகப்படலாமெனவும் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் உடன்படுகின்றார்/ உடன்படுகின்றனர் மற்றும் ஒப்புக்கொள்கின்றார் (ஒப்புக்கொள்கின்றனர்).

12.1.1 வங்கியின், அதன் தலைமையலுவலகத்தின், வங்கியின் கிளையலுவலகங்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளணியினர்.

12.1.2 எவரேனும் தரவுச் செய்முறைப்படுத்தல் சேவை வழங்குநர்.

12.1.3 கூற்றுக்களை அச்சிட்டு அஞ்சலிலிடுவதற்கு வங்கியினால் ஈடுபடுத்தப்பட்ட எவரேனுமாள்.

12.1.4 அவசியமானவரென வங்கி கருதக்கூடிய எவரேனுமாள்

12.1.5 நிருவாக மற்றும் உள்ளகக் கண்காணிப்புத் தேவைப்பாடுகளுட்பட ஏதேனும் நோக்கத்துக்காக வங்கியின் அபிப்பிராயத்தில் அத்தகைய கடத்துகை, தேக்கம் அத்துடன் / அல்லது அணுகுகை அவசியமாகவுள்ளவிடத்து கடிதவுறைகளினுள் இடுதல், கூற்றுக்களை அச்சிடுதல் மற்றும் அஞ்சலிலிடுதல் அல்லது எவையேனும் ஒத்த சேவைகளை வழங்குதல் உட்பட அவசியமென வங்கி கருதக்கூடியவாறு வங்கி அதன் சாதாரணத் தொழில்நெறியில் அத்தகைய சேவைகளை எந்த ஆளுக்கு வழங்குகின்றதோ அந்த எவரேனுமாள்.

## 13. அறிவுறுத்தல்களின்மீது செயலாற்றுதல்

கணக்குவைத்திருப்பவரிடமிருந்து / வைத்திருப்பவர்களிடமிருந்து அஞ்சல்மூலம் பெறப்பட்ட அல்லது வேலைமணித்தியாலங்களினுள் வங்கியின் கிளைகளுள் எவற்றிலும் அதற்கு ஒப்படைக்கப்பட்ட (நிலையான அறிவுறுத்தல்களுட்பட) கணக்குகளுக்குப் பற்றுவைப்பதற்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்ட எழுத்திலான அறிவுறுத்தல்களின்மீது மட்டுமே வங்கி செயலாற்றுதல் வேண்டும். குறிப்பிட்ட காலஎல்லையினுள் அத்தகைய அறிவுறுத்தல்களின்மீது செயலாற்றத் தவறியமையிலிருந்து எழுகின்ற எவையேனும் உரிமைக்கோரிக்கைகள், இழப்புக்கள் அல்லது செலவுதொகைகளுக்காக வங்கி பொறுப்பாதலாகாது அல்லது பொறுப்புடைமை கொண்டதாகக் கொள்ளப்படுதலாகாது. தொலைநகல், இலத்திரனியல் அஞ்சல் அல்லது வேறேதேனும் இலத்திரனியல் ஊடகத்தினூடாகப் பெறப்பட்ட எவையேனும் அறிவுறுத்தல்களை, இம்முறைகளைப் பயன்படுத்திக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு வங்கிக்கும் கணக்குவைத்திருப்பவருக்கும்/ வைத்திருப்பவர்களுக்குமிடையே குறிப்பிட்ட உடன்படிக்கையின்றி, வங்கி ஏற்றுக்கொள்ளுதலாகாது. வங்கியின் தனித்தற்றுணிபில் அவ்வாறு செய்யப்பட்டாலொழிய, பணவைப்புக்கள், பண அல்லது காசோலை மீளப்பெறுகைகள், காசோலை வைப்புக்கள் மற்றும் வேறு பற்று/கடன் கொடுக்கல்வாங்கல்களுக்காக வங்கி தனிவேறான வாடிக்கையாளர் அறிவுரைகளை அஞ்சல்மூலம் அனுப்புதலாகாது.

## 14. பயன்பாட்டு சிட்டைக் கொடுப்பனவுகள்

முறையான பயன்பாட்டுக் கம்பெனியுடன் பேணப்பட்ட கணக்குவைத்திருப்பவரின் கணக்குக்கு வரவுவைப்பதில் ஏதேனும் பயன்பாட்டுக் கம்பெனியின் தாமதத்துக்கு வங்கி பொறுப்புடையதாதலாகாது. ஆயின், வங்கியானது உரிய நேரத்தில் இயைபான பயன்பாட்டுக் கம்பெனிக்குக் கொடுப்பனவு செய்திருத்தல் வேண்டும்.

## 15. நிதிக் கொடுக்கல்வாங்கல் ஒழுங்குவிதிகள்

பணம் தூய்தாக்கலைத் தடுத்தல், பயங்கரவாதி நிதியளிப்பு மற்றும் தடைவிதிப்புகளுக்கு அமைந்திருக்கக்கூடிய எவரேனும் ஆட்களுக்கு அல்லது உருவகங்களுக்கு நிதிசார் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல் என்பன தொடர்பாக வங்கிக்கு ஏற்புடையனவான சட்டங்களுக்கிணங்கச் செயலாற்றுவதற்கு வங்கி தேவைப்படுத்தப்படுகின்றது. ஆதலால் வங்கி, அத்தகைய சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கச் செயலாற்றுவதற்குத் தோதானதென அதன் தனியானதும் முற்றானதுமான தற்றுணிபில் அது கருதுகின்ற ஏதேனும் நடவடிக்கைக்கு உரித்துடையது. அத்தகைய நடவடிக்கையானது, வங்கி முறைமைகளினூடாகக் கணக்குவைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்கு அல்லது அதற்கு அல்லது அதன்சார்பில் அனுப்பப்பட்ட எவையேனும் கொடுப்பனவுச் செய்திகளையும் மற்றும் வேறு தகவல்களையும் அல்லது தொடர்பாடல்களையும் இடைமறிப்பதனையும் நுண்ணுாய்வுசெய்வதனையும் தடைவிதிக்கப்பட்ட ஆளொருவரை அல்லது உருவகமொன்றைக் குறிப்பீடுசெய்யக்கூடிய பெயரொன்று உண்மையாக அவ்வாளை அல்லது உருவகத்தைக் குறிப்பீடுசெய்கின்றதாவென்பதுபற்றி மேலதிக விசாரணைகளைச் செய்வதனையும் உள்ளடக்கலாம் ஆனால் அதற்கு வரையறுக்கப்பட்டதல்ல. வங்கியானது பின்வருவனவற்றிலிருந்து எழுகின்றதாக எவரேனும் திறத்தவரினால் உறப்பட்ட இழப்புக்கு (நேரடியாகவிருப்பினுஞ்சரி அல்லது விளைவாந்தன்மையினதாகவிருப்பினுஞ்சரி மற்றும் இலாபத்தின் அல்லது வட்டியின் இழப்பை வரையறையின்றி உள்ளடக்குவதாயினுஞ்சரி) அல்லது சேதத்துக்குப் பொறுப்பாதலாகாது:

15.1.1 அத்தகைய எல்லாச் சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்கச் செயலாற்றுவதற்குத் தோதான வங்கி அதன் தனியானதும் முற்றானதுமான

தற்றுணிபின்படி கருதுகின்ற எவையேனும் நடவடிக்கைகளின்மூலம் முழுமையாக அல்லது பகுதியளவில் விளைவிக்கப்பட்ட கணக்கு நியதிகள் அல்லது வேறு கடப்பாடுகளின்கீழான அதன் கடமைகளுள் எவற்றையும் புரிவதில் வங்கியினாலான ஏதேனும் தாமதம் அல்லது தவறுதல்; அல்லது

15.1.2 இவ்வாசகத்தின்கீழ் வங்கியின் உரிமைகளுள் எவற்றையும் பிரயோகித்தல். குறித்தசில சூழ்நிலைகளில், வங்கி எடுக்கக்கூடிய நடவடிக்கை, குறித்தசில தகவல்களைச் செய்முறைப்படுத்துவதனைத் தடுக்கலாம் அல்லது தாமதத்தை ஏற்படுத்தலாம். ஆதலால் வங்கி, இவ்வாசகத்தைப் பின்பற்றி எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கையின் விடயமாகவுள்ள எவையேனும் கொடுப்பனவுச் செய்திகள் மற்றும் தொடர்பாடல்கள் தொடர்பாக வங்கியின் முறைமைகளின்மீதான எவையேனும் தகவல்கள், அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும்போது அவை அணுகப்படும் நேரத்தில் செம்மையானவை, நடப்பிலுள்ளவை அல்லது நாளாதுவரையானவையென நம்புறுதிசெய்வதில்லை. எவையேனும் ஏற்புடையனவான சட்டங்களினதும் ஒழுங்குவிதிகளினதும் மேலோங்கும் தேவைப்பாடுகளுக்கமைய, செய்முறையில் நியாயமாக இருக்கக்கூடியவுடன் அத்தகைய சூழ்நிலைகள் உள்ளமைபற்றிக் கணக்குவைத்திருப்பவருக்கு/ வைத்திருப்பவர்களுக்கு அறிவிப்பதற்கு வங்கி முயற்சிக்கும்.

15.1.3 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்துக்கிணங்க நிதிசார் உளவறிதற் கூறுக்கு (நிஉகூ) சந்தேகத்துக்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் தொடர்பான விதிகள்

ஏதேனும் கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் ஏதேனும் சட்டமுறையற்ற செயற்பாட்டை அல்லது வேறேதேனும் குற்றவியல் தவறைப் புரிவதுடன் தொடர்புபடலாமெனச் சந்தேகிப்பதற்கு வங்கிக்கு நியாயமான ஏதுக்களிருப்பின் அல்லது எவரேனுமாளினால், ஆட்கள் தொகுதியினால் அல்லது

உருவகத்தினால் அல்லது ஏதேனும் புலனாய்வுக்கு அல்லது குற்றவழக்குக்கு இயைபான பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளிப்பு உட்பட ஏதேனும் உத்தேசிக்கப்பட்ட சட்டமுறையற்ற செயற்பாடு அல்லது குற்றவியல் தவறுக்கு இயைபாகவிருக்கக்கூடிய தகவல்களை வங்கி கொண்டிருப்பின், வங்கியானது அவற்றை உடனடியாக நிஉகூறுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

அத்தகைய அறிக்கை நிஉகூறினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய படிவத்தில் செய்யப்படுதலும் அத்தகைய விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றாதிருப்பதற்கு நிஉகூ வங்கியைப் பணிக்கும் பட்சத்தில், அவசியமான விசாரணைகளைச் செய்வதற்கும் சட்ட வலுவுறுத்தல் முகவராண்மைகளின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கும் நிஉகூறை அனுமதிப்பதற்கு வங்கி கொடுக்கல்வாங்கலை இடைநிறுத்திவைத்தல்வேண்டும்.

இவ்விதிகளின்கீழ் வங்கியினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கைபற்றி அறிவிக்கப்படுவதற்கு வாடிக்கையாளர் உரித்துடையவராதலாகாதென்பதுடன் வங்கியினால் எடுக்கப்பட்ட அத்தகைய நடவடிக்கை தொடர்பில் வங்கி எவ்வகையிலும் வாடிக்கையாளருக்குப் பொறுப்பாதலோ அல்லது பொறுப்புடையதாகவிருத்தலோ ஆகாது.

2006 ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்துக்கிணங்கத் தொடக்கநிலைக்கு மேலான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் தொடர்பான விதிகள்.

நிஉகூறினால் விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்திலும் அத்தகைய காலப்பகுதியினுள்ளும், ஒழுங்குவிதியினால் குறித்துரைக்கப்பட்ட பணத்தொகையை விஞ்சுகின்ற ஒவ்வொரு பணக் கொடுக்கல்வாங்கலையும் இலத்திரனியல் நிதிக்

கைமாற்றத்தையும் நிஉகூறுக்கு அறிக்கையிடுவதற்கு வங்கி தேவைப்படுத்தப்படுகின்றது.

அறிக்கையிடுதலைத் தேவைப்படுத்துகின்ற இலத்திரனியல் நிதிக் கைமாற்றங்கள், உட்திரும்பல் மற்றும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகள், SLIP கைமாற்றல்கள், CEFT கைமாற்றல்கள், RTGS கொடுக்கல்வாங்கல்கள், கடன் அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள், பற்றட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் (ஏற்புடையனவாயின்) மற்றும் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள் என்பனவுட்பட ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல் எத்தகையதுமான எம்முறையிலேனும் செய்யப்பட்ட இலத்திரனியல் நிதிக் கைமாற்றங்களை உள்ளடக்குதல் வேண்டும்.

இவ்விதிகளின்கீழ் வங்கியினால் எடுக்கப்பட்ட ஏதேனும் நடவடிக்கை தொடர்பில் வங்கியானது வாடிக்கையாளருக்கு எவ்வகையிலும் பொறுப்பாகவிருத்தலாகாது அல்லது பொறுப்புடையதாகவிருத்தலாகாது.

## 16. தகவல்களை வெளிவிடுதல்

16.1 கணக்குவைத்திருப்பவரின்/ வைத்திருப்பவர்களின் அல்லது ஏதேனும் தகுதிவாய்ந்த நியாயாதிக்கத்திலுள்ள ஏதேனும் பரிவர்த்தனையின், அரசாங்கத்தின் அல்லது ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையின் சார்பில் வங்கி கொடுக்கல்வாங்கலை (வாங்கல்களை) அதில் நிறைவேற்றுகின்ற, அத்தகைய நியாயாதிக்கத்தின் ஏதேனும் சட்டத்தினால், விதிகளினால் அல்லது ஒழுங்குவிதிகளினால் அவ்வாறு செய்யும்படி வங்கி கோரப்படக்கூடியவாறு அத்தகைய ஆளுக்கு (ஆட்களுக்கு) கணக்குவைத்திருப்பவரின்/ வைத்திருப்பவர்களின் சார்பில் வங்கியினால் நிறைவேற்றப்பட்ட கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள், கணக்கு

(கணக்குகள்) அத்துடன்/ அல்லது கொடுக்கல்வாங்கல் (வாங்கல்கள்) தொடர்பான தகவல்களை வெளிவிடுவதற்கும் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார் (அதிகாரமளிக்கின்றனர்).

16.2 காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியின் நிதிசார் உளவறிதற் கூறின் வர்த்தமானி அறிவித்தலின்மூலம் விதிக்கப்பட்ட தொடக்கநிலைக்கு மேலான எல்லா வைப்புக்களையும் அறிக்கையிடுவதற்கு வங்கி, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தினால் பிணிக்கப்பட்டுள்ளது.

## 17. வாடிக்கையாளர் தகவல்களைச் சேகரித்தலும், செய்முறைப்படுத்துதலும், பகிர்தலும்

### 17.1 சேகரித்தல்

17.1.1 கார்கில்ஸ் வங்கியானது, (வாடிக்கையாளர்பற்றிய இயைபான தகவல்கள், வாடிக்கையாளரின் கொடுக்கல்வாங்கல்கள், கார்கில்ஸ் வங்கியின் விளைபயன்களையும் சேவைகளையும் வாடிக்கையாளர் பயன்படுத்துதல் உட்பட) வாடிக்கையாளர் தகவல்களைச் சேகரிக்கலாம், பயன்படுத்தலாம் மற்றும் பகிரலாம். வாடிக்கையாளர் தகவல்கள் வாடிக்கையாளரிடமிருந்து (அல்லது வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுகின்ற ஓராளிடமிருந்து) கோரப்படலாம், அல்லது கார்கில்ஸ் வங்கிக்குக் கிடைக்கக்கூடிய வேறு தகவல்களிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட அல்லது அவற்றுடன் இணைந்த (பகிரங்கமாகக் கிடைக்கக்கூடிய தகவல்களிலிருந்தானவையுட்பட்ட) வேறு மூலங்களிலிருந்து, கார்கில்ஸ் வங்கியினால் அல்லது அதன்சார்பில் சேகரிக்கவும்படலாம்.

### 17.2 செய்முறைப்படுத்துதல்

17.2.1 பின்வரும் நோக்கங்கள் சம்பந்தமாகக் கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளர் தகவல்களைச் செய்முறைப்படுத்தும்,கைமாற்றும் மற்றும் வெளிவிடும்:

(அ) சேவைகளை வழங்குதல் மற்றும் வாடிக்கையாளரினால் கோரப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவையேனும் கொடுக்கல்வாங்கல்களுக்காக,

(ஆ) இணங்கியொழுகுகைக் கடப்பாடுகளை எதிர்கொள்ளுதல்,

(இ) நிதிசார் குற்றச்செயல் ஆபத்து முகாமைச் செயற்பாடு,

(ஈ) வாடிக்கையாளரிடமிருந்து வருமதியான எவையேனும் தொகைகளைச் சேகரித்தல்,

(உ) கடன் செவ்வைபார்த்தல்களை நடாத்துதலும் கடன் குறிப்பீடுகளைப் பெற்றுக்கொள்ளுதலும் அல்லது வழங்குதலும்,

(ஊ) கார்கில்ஸ் வங்கியின் அக்கறையை வலுவுறுத்தல் அல்லது பாதுகாத்தல்,

(எ) கார்கில்ஸ் வங்கியின் உள்ளகத் தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகளுக்காக (வரையறையின்றி, கடன் மற்றும் ஆபத்து முகாமை, முறைமை அல்லது விளைபயன் அபிவிருத்தி அத்துடன் திட்டமிடுதல், காப்புறுதி, கணக்காய்வு மற்றும் நிர்வாக நோக்கங்கள் உட்பட),

(ஏ) வாடிக்கையாளருடன் கார்கில்ஸ் வங்கியின் ஒட்டுமொத்தத் தொடர்புமுறையைப் பேணுதல் (சந்தைப்படுத்தல் அல்லது வாடிக்கையாளருக்கு நிதிசார் சேவைகளை அல்லது தொடர்புபட்ட விளைபயன்களை மேம்படுத்தல் மற்றும் சந்தை ஆராய்ச்சி) (“நோக்கங்கள்”).

## 17.3 பகிர்தல்

17.3.1 சேவைகளைப் பயன்படுத்துவதன்மூலம், கார்கில்ஸ் வங்கி (நோக்கங்களுக்காக அவசியமானவாறும் தோதானவாறும்) பின்வரும் பெறுநர்களுக்கு எவையேனும் வாடிக்கையாளர் தகவல்களைக் கைமாற்றலாம் மற்றும் வெளிவிடலாம் என வாடிக்கையாளர் உடன்படுகின்றார் (அவர்களும், நோக்கங்களுக்காக, அத்தகைய வாடிக்கையாளர் தகவல்களைச் செய்முறைப்படுத்தலாம், கைமாற்றலாம் மற்றும் வெளிவிடலாம்):

(அ) கார்கில்ஸ் வங்கியின் எவரேனும் கீழொப்பந்தக்காரர்கள், முகவர்கள், சேவைவழங்குநர்கள் அல்லது இணையாளிகள் (அவர்களது ஊழியர்கள், பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களுட்பட);

(ஆ) எவையேனும் அதிகாரசபைகளிடமிருந்து பெறப்பட்ட எவையேனும் கோரிக்கைகளுக்கான பதிலாக;

(இ) வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுகின்ற எவரும், கொடுப்பனவுப்பெறுநர்கள், நன்மைபெறுநர்கள், கணக்குநியமத்தர்கள், இடையீட்டாளர், தொடர்பாளரும் முகவர் வங்கிகளும், தீர்வகங்கள், தீர்வு அல்லது கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள், சந்தை எதிர்த்திறத்தவர்கள், எதிரோட்டப்பிடித்துவைத்தல் முகவர்கள், பண்டமாற்று அல்லது வியாபாரச்சேமவைப்பிடங்கள், பங்குத்தொகுதிப் பரிவர்த்தனைகள், வாடிக்கையாளர் பிணையங்களில் அக்கறைகொண்டுள்ள கம்பெனிகள் (அத்தகைய பிணையங்கள்) வாடிக்கையாளருக்காகக் கார்கில்ஸ் வங்கியினால் வைத்திருக்கப்படுமிடத்து);

(ஈ) சேவைகளில் அக்கறைகொள்ளுகின்ற அல்லது சேவைகளில் அல்லது அவைசம்பந்தமாக ஆபத்தை ஏற்கின்ற எவரேனும் திறந்தவர்;

(உ) ஏனைய நிதிநிறுவனங்கள், கடன் குறிப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்காக அல்லது வழங்குவதற்காகக் கடன் குறிப்பீட்டு முகவர் நிலையங்கள் அல்லது கடன்தகவல் பணியகங்கள், கணக்காய்வாளர்கள் / வரி ஆலோசகர்கள்;

(ஊ) வாடிக்கையாளருக்குச் சொத்து முகாமைச் சேவைகளை வழங்குகின்ற எவரேனும் மூன்றாந்திறத்தவரான நிதி முகாமையாளர்;

(எ) அறிமுகங்களை அல்லது குறிப்பீடுகளைக் கார்கில்ஸ் வங்கி வழங்குகின்ற எவரேனும் அறிமுகப்படுத்தும் தரகர்;

(ஏ) சேவைகள் வழங்கப்படுகின்ற நியாயாதிக்கத்தைப்போன்று அதே பாதுகாப்பு மட்டத்தை வழங்குகின்ற தரவுப்பாதுகாப்புச் சட்டங்களைக் கொண்டிராத நியாயாதிக்கங்களுட்பட, எங்கேனும் அமைந்துள்ள ஏதேனும் கார்கில்ஸ் வங்கித் தொழிற்கைமாற்றம், கையுதிர்ப்பு, ஒன்றிணைவு அல்லது கொள்ளுதல் சம்மந்தமாக.

## 17.4 வாடிக்கையாளரின் கடப்பாடுகள்

17.4.1 காலத்துக்குக்காலம் கார்கில்ஸ் வங்கிக்கு வழங்கப்பட்ட வாடிக்கையாளர் தகவல்களில் எவையேனும் மாற்றங்கள் இருப்பின் அவற்றை உடனடியாகவும் எப்பட்சத்திலும் 30 நாட்களினுள்ளும் எழுத்தில் கார்கில்ஸ் வங்கிக்கு அறிவிக்கவும் கார்கில்ஸ் வங்கியிடமிருந்தான ஏதேனும் கோரிக்கைக்குப் பதிலளிக்கவும் வாடிக்கையாளர் உடன்படுகின்றார்.

17.5 எந்தச் சம்பந்தப்பட்ட / ஒவ்வோராளினதும் ஆட்களினதும் தகவல்களைத் (தனிப்பட்ட தரவுகள் அல்லது வரித் தகவல்களுட்பட) வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கிக்கு வழங்கியுள்ளதோ அந்தச் சம்பந்தப்பட்ட ஒவ்வோராளுக்கும் / ஆட்களுக்கும் அறிவிக்கப்பட்டு இந்நியதிநிபந்தனைகளில் தரப்பட்டுள்ளவாறு அவர்களின் தகவல்கள் செய்முறைப்படுத்தப்படுவதற்கும், வெளிவிடப்படுவதற்கும், கைமாற்றப்படுவதற்கும், அவர் உடன்பட்டுள்ளார் அல்லது அவர்கள் உடன்பட்டுள்ளனரென வாடிக்கையாளர் உறுதிப்படுத்துகின்றார். வாடிக்கையாளர், சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு / அத்தகைய ஆட்களுக்கு, அவர்களின் தனிப்பட்ட தரவுகளை அணுகித் திருத்துவதற்கான உரிமைகளை அவர்கள் கொண்டிருக்கலாமென அறிவுரை வழங்குதல் வேண்டும்.

17.6 பின்வரும் சந்தர்ப்பங்களில், அதாவது:

17.6.1 கார்கில்ஸ் வங்கி நியாயமாகக் கோருகின்ற வாடிக்கையாளர் தகவல்களை வாடிக்கையாளரொருவர் வழங்கத்தவறுமிடத்து, அல்லது

17.6.2 நோக்கங்களுக்காகக் கார்கில்ஸ் வங்கி வாடிக்கையாளர் தகவல்களைச் செய்முறைப்படுத்துவதற்கு, கைமாற்றுவதற்கு அல்லது வெளிவிடுவதற்குத் தேவையாகவிருக்கக்கூடிய எவையேனும் சம்மதங்களை வாடிக்கையாளர் வழங்கமறுக்குமிடத்து அல்லது மீளப்பெறுமிடத்து, அல்லது

17.6.3 நிதிசார் குற்றச்செயல் புரியப்படும் நிகழ்தகவு தொடர்பாகக் கார்கில்ஸ் வங்கி சந்தேகங்களைக் கொண்டிருக்குமிடத்து அல்லது வாடிக்கையாளர் கார்கில்ஸ் வங்கியின் உறுப்பினரொருவருக்கு இயல்திற நிதிசார் குற்றச்செயல் ஆபத்தை முன்வைக்குமிடத்து,

கார்கில்ஸ் வங்கியானது:

(அ) வாடிக்கையாளருக்குப் புதிய சேவைகளை வழங்க, அல்லது எல்லாச் சேவைகளையும் அல்லது அவற்றின் பாகத்தைத் தொடர்ந்து வழங்க இயலாதிருக்கலாம் என்பதுடன் வாடிக்கையாளருடனான அதன் தொழில் தொடர்புமுறையை முடிவுறுத்துவதற்கான உரிமையையும் ஒதுக்கிவைக்கின்றது;

(ஆ) இணங்கியொழுகுகைக் கடப்பாடுகளை எதிர்கொள்வதற்குக் கார்கில்ஸ் வங்கிக்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கலாம்; அத்துடன்/ அல்லது

(இ) வாடிக்கையாளர் கணக்கை (கணக்குகளை) முடக்கலாம், கைமாற்றலாம் அல்லது மூடிவிடலாம்.

**18. தரவுகளைப் பாதுகாத்தல்**

18.1 ஓர் உள்நாட்டு நியாயாதிக்கத்தில் அல்லது வெளிநாட்டில் அது செய்முறைப்படுத்தப்படினுஞ்சரி, தரவுகளைப் பாதுகாத்தற் சட்டவாக்கத்துக்கிணங்க வாடிக்கையாளர் தகவல்கள், கார்கில்ஸ் வங்கியின் எல்லா உறுப்பினர்களும், பணியாட்டொகுதியினரும், மூன்றாந்திறத்தவர்களும் அதற்கமைந்தோராகவுள்ள, இரகசியமும் பாதுகாப்பும் பற்றிய கண்டிப்பான சட்டக்கோவையொன்றினால் பாதுகாக்கப்படும்.

**19. நிதிசார் குற்றச்செயல் ஆபத்து முகாமைச் செயற்பாடு**

19.1 நிதிசார் குற்றச்செயலை (“நிதிசார் குற்றச்செயல் ஆபத்து முகாமைச் செயற்பாடு”) கண்டுபிடித்தல், புலனாய்வுசெய்தல் மற்றும் தடுத்தல் தொடர்பாக அல்லது

அதுசம்பந்தமாகச் சட்டங்கள், ஒழுங்குவிதிகள், தடைவிதிப்பு முறைகள், சர்வதேச வழிகாட்டுகை, உள்ளகக் கொள்கைகளும் நடவடிக்கைமுறைகளும், அத்துடன் / அல்லது ஏதேனும் அதிகாரசபையிடமிருந்தான கோரிக்கைகள் என்பவற்றிற்கு இணங்கியொழுகுவதற்குக் கார்கில்ஸ் வங்கி [அவர்களின் தனியானதும் முற்றானதுமான தற்றுணிபில்] தோதானதெனக் கருதப்படும் ஏதேனும் நடவடிக்கையை எடுப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றதுடன் அதனை எடுக்கலாம். அத்தகைய நடவடிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்கலாம், ஆனால் அவற்றிற்கு வரையறுக்கப்பட்டதல்ல: (அ) ஏதேனும் அறிவுறுத்தல், தொடர்பாடல், படிப்படியாகக் கடன் பெறுவதற்கான கோரிக்கை, சேவைகளுக்கான விண்ணப்பம் அல்லது வாடிக்கையாளருக்கு அதனால் அல்லது அதன்சார்பில் அனுப்பப்பட்ட ஏதேனும் கொடுப்பனவு என்பவற்றை இடைத்தடுத்தல், இடைமறித்தல் மற்றும் புலனாய்வுசெய்தல், (ஆ) நிதிகளின் மூலத்தை அல்லது உட்கருதப்பட்ட பெறுநரைப் புலனாய்வுசெய்தல், (இ) கார்கில்ஸ் வங்கியின் உடைமையிலுள்ள ஏனைய தொடர்புபட்ட தகவல்களுடன் வாடிக்கையாளர் தகவல்களை இணைத்தல், அத்துடன் / அல்லது (ஈ) அவர்கள் தடைவிதிப்பு முறையொன்றுக்கு அமைந்தோராகவிருக்கின்றனரா அல்லது ஒரு வாடிக்கையாளரின் ஆளடையாளத்தை அல்லது அந்தஸ்தை உறுதிப்படுத்துகின்றனராவென, ஓர் ஆளின் அல்லது உருவகத்தின் அந்தஸ்து பற்றி மேலதிக விசாரணைகளைச் செய்தல்.

19.2 விதிவிலக்காக, நிதிசார் குற்றச்செயல் ஆபத்து முகாமைச் செயற்பாடு பற்றி கார்கில்ஸ் வங்கியின் பொறுப்பேற்பு, ஏதேனும் கொடுப்பனவைச் செய்தலை அல்லது தீர்வுசெய்தலை, வாடிக்கையாளர் அறிவுறுத்தல்களை அல்லது சேவைகளுக்கான விண்ணப்பத்தைச் செய்முறைப்படுத்தலை அல்லது சேவைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றின் பாகத்தை வழங்குதலைக் கார்கில்ஸ் வங்கி தாமதப்படுத்துவதற்கு, முடக்குவதற்கு அல்லது மறுப்பதற்கு இட்டுச்செல்லலாம். சட்டத்தினால் அனுமதிக்கப்படத்தக்க அளவுவரை, கார்கில்ஸ் வங்கி, நிதிசார் குற்றசெயல் ஆபத்து

முகாமைச் செயற்பாட்டைப் பொறுப்பேற்றல் சம்பந்தமாக முழுமையாக அல்லது பகுதியளவில் விளைவிக்கப்பட்டதும் வாடிக்கையாளரினால் அல்லது எவரேனும் மூன்றாந்திறத்தவரினால் அடையப்பட்டதும் அல்லது உறப்பட்டதும் எவ்வாறாயினும் எழுகின்றதுமான ஏதேனும் இழப்புத் தொடர்பில் வாடிக்கையாளருக்கு அல்லது எவரேனும் மூன்றாந்திறத்தவருக்குப் பொறுப்பாதலாகாது.

## 20. வங்கியின் சோந்தை மற்றும் எதிரீட்டுரிமை

பங்கமின்றியும் ஏதேனும் பொதுவான சோந்தை, எதிரீட்டுரிமை அல்லது எத்தகையதுமான எக்கணக்கின்மீதும் வங்கி கொண்டிருக்கக்கூடிய பிணைப்பொறுப்பு என்றவகையான வேறு உரிமையுடன் சேர்த்து, கணக்கு வைத்திருப்பவர் எந்நேரத்திலும் முன்னறிவித்தலின்றியும் பின்வருமாறு வங்கி செய்யலாமென உடன்படுகின்றார்:

(அ) உள்ளபடியானதாக, எதிர்பாராததாக, தற்போதையதாக அல்லது எதிர்காலத்தினதாக மற்றும் கணக்குவைத்திருப்பவரினால் தனியாக அல்லது வேறெவரேனுமாளுடன் கூட்டாகச் (''சொல்லப்பட்ட கடன்பாடு'') சேர்மதியாக இருக்கின்ற எவ்வகையினதான கடன்பாட்டுக்குமெதிராக ஏதேனும் கணக்கின் அல்லது தனியாக அல்லது வேறெவரேனுமாளுடன் கூட்டாகக் கணக்குவைத்திருப்பவரின் வேறேதேனும் கணக்கின் வரவிற்கு ஏதேனும் நாணயத்தில் வைத்திருக்கப்பட்ட எவையேனும் பணங்களை (''சொல்லப்பட்ட பணங்கள்'') (அத்தகைய பயன்பாடு ஏதேனும் வைப்பின் முதிர்வுத் திகதிக்கு முன்னர் அதனை இடைமுறிப்பதனைத் தேவைப்படுத்துகின்றபோதிலும்) பயன்படுத்தலாம்; அத்துடன் /அல்லது

(ஆ) கோரப்படும்போது அல்லது கணக்குவைத்திருப்பவருக்குச் சொல்லப்பட்ட பணங்களுள் எவையும் வருமதியாகவுள்ளபோது அத்துடன் அல்லது சொல்லப்பட்ட கடன்பாடு இயைபான நேரத்தில் சொல்லப்பட்ட பணங்களுக்குச் சமமாகவிருக்கும் அதேநேரத்தில் அவற்றை விஞ்சும் அளவுவரை அல்லது மீளச் செலுத்துவதற்கு மறுக்கலாம். மேலே வாசகம் 15 இன்கீழ் வங்கியின் உரிமைகள் வாடிக்கையாளரின் இறப்பினால் அல்லது சட்டத் தகுதிக்குறைப்பாட்டினால் பாதிக்கப்படுதலாகாது.

## 21. தொழிற்படுத்தப்படாத கணக்குகள் - செயலற்றமையும் கைவிடப்பட்ட ஆதனமும்

கணக்கொன்று தொழிற்படுத்தப்படாததாக வந்து செயலற்றமைக்குள்ளாகும்போது, வாடிக்கையாளர்/ வாடிக்கையாளர்கள், தமது தற்போதைய விபரங்களை (தனிப்பட்ட விபரங்கள், தொடர்பு விபரங்கள், தொழில் மற்றும் நிதிசார் விபரங்கள்), கணக்கைச் செயலூக்குவிப்பதற்கானவொரு கோரிக்கையுடன்சேர்த்து தேசிய அடையாள அட்டையின் பிரதி என்பவற்றை வழங்கவேண்டும்.

கைவிடப்பட்ட ஆதனம் என்பது, ஏதேனும் வங்கிக்கணக்கிலுள்ள மீதியையும் (நடப்பு, சேமிப்பு, காலவைப்புக்கள் அல்லது வேறுவகையானவை) ஏதேனும் வங்கித்தொழில் வசதிக்கான பிணைப்பொறுப்பாகவன்றி (காப்பு வைப்புப் பெட்டியிலுள்ள (SDL) உள்ளீடுகள் போன்றவை) அதுதொடர்பில் பத்தாண்டுகளுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குக் கொடுக்கல்வாங்கலெதுவும் செய்யப்பட்டிராததும் ஒரு வாடிக்கையாளரினால் அல்லது அவரது சார்பில் வங்கியில் வைத்திருக்கப்பட்டதுமான வேறேதேனும் ஆதனத்தையும் உள்ளடக்கும்.

வருடாந்த அடிப்படையில் ஒவ்வோராண்டினதும் முடிவிலிருந்து ஆறு மாதங்களினுள் பணச்சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய கைவிடப்பட்ட ஆதனத்தின்மீது இலங்கை மத்திய வங்கிக்கு (இமவ) அறிக்கையொன்றைச் சமர்பிக்கும்படி வங்கி தேவைப்படுத்தப்படுகின்றது.

இமவங்கிக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்து முப்பது (30) நாட்களினுள், வங்கியானது, சொந்தக்காரரின் பெயரையும் ஆதனம் சம்பந்தமான விபரங்களையும் குறிப்பிட்டு சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் பத்திரிகைகளில் அத்தகைய கைவிடப்பட்ட ஆதனம்பற்றிய முழுமையான நிரலொன்றை வெளியிடுதல் வேண்டும்.

கைவிடப்பட்ட ஆதனத்தின் முறையான சொந்தக்காரர்களுக்கு ஆதனத்தை உரிமைகோருவதற்கு அவர்களுக்கு நியாயமான காலப்பகுதியைக் கொடுத்தும் கைவிடப்பட்ட ஆதனம்பற்றி அவர்களுக்கு அறிவித்தும் அவர்களது கடைசியாக அறிவிக்கப்பட்ட முகவரிக்குப் பதிவஞ்சல்மூலம் உடனிகழ்வாக அறிவித்தல்கள் அனுப்பப்படுதல் வேண்டும்.

வாடிக்கையாளரினால் செல்லுபடியான உரிமைக்கோரிக்கை செய்யப்பட்டாலொழிய, வங்கியானது, வங்கியினால் நியாயமானதெனத் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகைய காலத்தினுள் -

(i) எல்லா நாணயங்களிலும் செயலற்ற கணக்குகளிற் பேணப்பட்ட நிதிகளை இமவங்கிக்குக் கைமாற்றுதல் வேண்டும்.

(ii) காப்பு வைப்புப்பெட்டிகளை உடைத்துத்திறந்து உள்ளீடுகளை வெளியில் எடுத்தல் வேண்டும்.

வாடிக்கையாளர்கள், ஆளடையாளம் பற்றிய எண்பிப்பின்மேல் எந்நேரத்திலும் இமவங்கிக்குக் கைமாற்றப்பட்ட அத்தகைய நிதிகளை உரிமைகோருவதற்கு உரித்துடையோராதல் வேண்டும்.

காப்பு வைப்புப்பெட்டிகளிலுள்ள உள்ளீடுகள் செல்லுபடியான உரிமைகோரிக்கையொன்று செய்யப்படும் அத்தகைய காலம்வரை அழிக்கப்படாமல் வங்கியின் காப்பான கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

கைவிடப்பட்ட ஆதனத்தை உரிமைகோருகின்ற வாடிக்கையாளரின் மரபுரிமையாளர்களும் அடுத்துறுநர்களும் சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அவர்களின் உரிமைக்கோரிக்கைகளை ஆதாரப்படுத்துகின்ற ஆவணங்களை வங்கிக்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

மேற்படி நடவடிக்கைமுறை சம்பந்தமாக வங்கியினால் உறப்பட்ட செலவுகள் கைவிடப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரர்களுக்கு வங்கியினால் பொறுப்பிக்கப்படுதல் வேண்டும்.

**22. நானாவிதமானவை**

22.1 இந்நியதிநிபந்தனைகளுள் எவற்றுக்கும் வேறேதேனும் சேவை, விளைபயன், தொழில் தொடர்புமுறை, கணக்கு அல்லது வாடிக்கையாளருக்கும் கார்கில்ஸ் வங்கிக்கும் இடையேயான உடன்படிக்கையிலுள்ளவற்றுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை இருக்கும்பட்சத்தில் இந்நியதிநிபந்தனைகள் மேலோங்கிநிற்றல்வேண்டும். வாடிக்கையாளரின் தகவல்கள் தொடர்பாக வாடிக்கையாளரிடமிருந்து ஏலவேயுள்ள எவையேனும் சம்மதங்களும்,

அதிகாரவளிப்புக்களும், கார்கில்ஸ் வங்கியினால் கோரப்பட்ட விட்டுக்கொடுப்புக்களும், அனுமதிகளும், ஏற்புடையதான உள்நாட்டுச் சட்டத்தினால் அனுமதிக்கப்படத்தக்க அளவுக்கு, முழுவலுவும் பயனும் கொண்டதாகத் தொடர்ந்து ஏற்புடையனவாதல் வேண்டும்.

22.2 இந்நியதிநிபந்தனைகளின் ஏற்பாடுகளுள் எல்லாம் அல்லது அவற்றின் ஏதேனும் பாகம் ஏதேனும் நியாயாதிக்கத்தின் சட்டத்தின்கீழ் ஏதேனும் அம்சம் தொடர்பில் சட்டமுறையற்றனவாக, செல்லுபடியற்றனவாக அல்லது வலுவுறுத்தமுடியாதனவாக வந்தால், வேறெவையேனும் நியாயாதிக்கங்களின் அத்தகைய ஏற்பாட்டை அல்லது அந்நியாயாதிக்கத்தில் இந்நியதிநிபந்தனைகளிள் எஞ்சியவற்றை அது பாதித்தலோ அல்லது அதன் சட்டத்தன்மைக்கு, செல்லுபடியாந்தன்மைக்கு அல்லது வலுவுறுத்தப்படமுடியுமாந்தன்மைக்குத் தீங்கு விளைத்தலோ ஆகாது.

## 23. முடிவுறுத்தலின்மேல் நீடித்திருத்தல்

23.1 இந்நியதிநிபந்தனைகளின் முடிவுறுத்துகை, வாடிக்கையாளருக்கு எவையேனும் சேவைகளின் வழங்குகை கார்கில்ஸ் வங்கியினால் முடிவுறுத்தப்படுகின்றமை எதுவும் அல்லது ஏதேனும் வாடிக்கையாளரின் கணக்கு மூடிவிடப்படுதல் எவ்வாறிருப்பினும் இந்நியதிநிபந்தனைகள் தொடர்ந்து ஏற்புடையனவாதல் வேண்டும்.

## 24. நியதிகளுக்கான திருத்தங்கள்

24.1 இந்நியதிநிபந்தனைகள் நாட்டில் வலுவிலுள்ள சட்டங்களினால் ஆளப்படுதலும் அவற்றுக்கிணங்கப் பொருளமைத்துக் கொள்ளப்படுதலும் வேண்டுமென்பதுடன் இந்நியதிநிபந்தனைகளுள் எவையும், அத்தகைய திருத்தங்கள் சட்டத்தினால், அரசாங்க ஒழுங்குவிதிகளினால் அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அல்லது வேறேதேனும் நியதிச்சட்டக் குழுவினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களினால்

அவசியமாக்கப்படின் அல்லது வங்கியினால் அவசியமாக்கப்பட்டுத் திருத்தப்பட்டவாறு, தன்னியக்கமாகத் திருத்தப்பட்டனவுமாகும்.

24.2 இதன்கண் அடங்கியுள்ள எல்லா நியதிநிபந்தனைகளினாலும் செய்யப்பட்ட ஏதேனும் அடுத்துப்பின்னரான திருத்தத்தினாலும் கணக்குவைத்திருப்பவர்/ வைத்திருப்பவர்கள் முற்றாகவும் சமமாகவும் பிணிக்கப்படுவர்.

24.3 வங்கி அதன் தனித்தற்றுணிபில் தகுதியானதெனக் கருதுகின்றவாறும் முன்னறிவித்தலின்றியும் காலத்துக்குக்காலம் இதன்கண்ணுள்ள நியதிநிபந்தனைகளுக்கு எதனையும் சேர்ப்பதற்கும், அவற்றை மீளாய்வதற்கும், திருத்துவதற்கும், நீக்குவதற்கும், இரத்துச்செய்வதற்கும் அல்லது வேறுபடுத்துவதற்குமான உரிமையை வங்கி ஒதுக்கிவைக்கின்றது. வங்கியின் நியதிநிபந்தனைகளும் எவையேனும் திருத்தங்களும் www.cargillsbank.com இல் வங்கியின் அலுவலகமுறையான இணையத்தளத்தின்மீது கிடைக்கக்கூடியனவாகவிருத்தல் வேண்டும் அத்துடன்/ அல்லது வங்கியின் ஏதேனும் கிளையலுவலகத்திலிருந்தான கோரிக்கையின்மேல் அத்துடன்/ அல்லது கூட்டுச்செய்திகளினூடாகக் கணக்குவைத்திருப்பவருக்கு / வைத்திருப்பவர்களுக்குக் கிடைக்கக்கூடியனவாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கணக்கு வைத்திருப்பவருக்கு / வைத்திருப்பவர்களுக்கு அத்தகைய அறிவித்தலைக் கொடுப்பதாகப் பொருளமைத்துக்கொள்ளப்படுதலும் வேண்டும்.

24.4 ஒரு கணக்கைத் திறக்கின்ற அல்லது தொடர்கின்ற எவரேனுமாள், விடயத்திற்கேற்ப இந்நியதிநிபந்தனைகளையும் வேறெவையேனும் இயைபான நியதிநிபந்தனைகளையும் வாசித்து விளங்கிக்கொண்டவராகவும் அவற்றினால் பிணிக்கப்பட்டவராகவும் கருதப்படுதல் வேண்டும். இப்பயன்பட்ட வெளிப்படுத்துகையொன்று அத்தகைய

கணக்கை / கணக்குகளைத் திறப்பதற்கான விண்ணப்பப்படிவத்தின்மீது நிரப்பப்படுதல் வேண்டும்.

**25.0 நியதிகளின் மொழிவு**

25.1 இந்நியதிநிபந்தனைகள் சிங்கள, தமிழ் மொழிகளில் கிடைக்கக்கூடியனவாதல் வேண்டும். ஆங்கில, சிங்கள மற்றும் தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், ஆங்கில மொழிவே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

25.2 இந்நியதிநிபந்தனைகளின் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்புக்கள் வங்கியின் இணையத்தளத்திலும் (www.cargillsbank.com) வங்கியின் எல்லாக் கிளைகளிலும் அச்சிடப்பட்ட படிவத்திலும் கிடைக்கக்கூடியனவாகும்.

**26. தடுக்கொணா வல்இக்கட்டு**

தடுக்கொணா வல்இக்கட்டு நிகழ்வொன்று இல்லாதொழியும்வரை நாம் ஏதேனும் சேவையை வழங்குவதனை இடைநிறுத்தலாம்.

“தடுக்கொணா வல்இக்கட்டு” என்பது, ஏதேனும்:

(அ) வெள்ளம், புயல், பூமியதிர்ச்சி அல்லது வேறு இயற்கை நிகழ்வு;

(ஆ) போர், பகைமைகள், பயங்கரவாதம், புரட்சி, கலவரம் அல்லது குடியியல் அமைதியின்மை;

(இ) வேலைநிறுத்தம், கதவடைப்பு அல்லது வேறு கைத்தொழில் நடவடிக்கை;

(ஈ) ஏதேனும் சட்டத்திலான மாற்றம் அல்லது ஏதேனும் சட்டத்தின் பொருள்கோடலின் அல்லது வலுவுறுத்தலிலான ஏதேனும் மாற்றம்,

என்று பொருளாகும்.

உங்களுக்குச் சேவையாற்றப்பட்டுள்ள முறைபற்றி நீங்கள் முழுமையாகத் திருப்தியடையாத பட்சத்தில், அல்லது எமது விளைபயன்கள் உங்கள் எதிர்பார்ப்புக்களை எதிர்கொள்ளாதிருப்பின், பின்வரும் விருப்புத்தெரிவுகளில் ஒன்றைப் பயன்படுத்தி நீங்கள் இயன்றளவு விரைவாக எம்முடன் தொடர்புகொள்ளவும்:

- + 94 117 640 000 என்ற பிரத்தியேகத் தொலைபேசிமூலம் வாடிக்கையாளர் சேவைகளுடன் தொடர்புகொள்ளவும்.
- உங்கள் அக்கறைகளை customersupport@cargillsbank.com க்கு மின்னஞ்சலில் அனுப்பவும்.
- எமக்கு எழுதவும்: வாடிக்கையாளர் கவனிப்புக்கூறின் தலைவர், கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட், இல. 696, காலி வீதி, கொழும்பு 03.
- எம்முடன் எழுப்பப்பட்ட எவையேனும் அக்கறைகளை நாம் உங்கள் பூரணமான திருப்திக்கு எப்போழுதும் தீர்த்துவைப்பதற்கு விரும்பும் அதேவேளையில் நிதிசார் ஒம்புட்சுமானின் அலுவலகத்திற்கும் எழுதி நீங்கள் நிவர்த்தி கோரமுடியும். ஒம்புட்சுமானின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறாகும்: நிதிசார் ஒம்புட்சுமானின் அலுவலகம் - இலங்கை, 143A, வஜிரா வீதி, கொழும்பு 5. தொ.பே: + 94 112 595 625 தொலைநகல் : + 94 112 595 624 மின்னஞ்சல்: info@financialombudsman.lk இணையத்தளம்: www.financialombudsman.lk
- மேலதிகத் தகவல்களுக்காக: www.cargillsbank.com என்ற எமது இணையத்தளத்தை அணுகவும்.